இந்த அகண்டபரிபூரண சச்சிதானந்தப் பிரமத்தினிடத்திலே சுத்தியில் ரசிதந்தோன்றினாற் போல மூலப்பிரகிருதி யென்றொரு சத்தியுண்டாயிற்று. அந்தமூலப்பிரகிருதியும் விகிர்தகுணமாகிய முக்குணத்துடனே கூடியிருக்கும். அந்தப்பிரகிருதியின் சாத்துவிதகுணத்தை மாயையென்றுஞ் சர்வகனு வுபாதியென்றும் ஈசுரகாரண சரீரமென்றுஞ் சொல்லப்படும். இந்தமாயையினிடத்திலே நிர்மல சலப்பிரதி விம்பம்போலப் பிரமஞ்சுலட்சணமாகப் பிரதிவிம்பிக்கும். இந்த விம்பசைதன்யத்தைச் சர்வக்ஞராகிய ஈசுரனென்று சொல்லப்படும்.

இந்தச் சாத்தீககுணமாயையினிடத்திலே சாத்தீகத்திற் சாத்தீகம் சாத்தீகத்தி லிராசதம் சாத்தீகத்திற் றாமதமென்று மூன்றுகுண முண்டாயின. இதிற் சாத்தீகத்திற் சாத்தீகம் பிரதானமாகும்போது அதிற் பிரதிவிம்பித்த வீசுரன் சகத்தை இரட்சிக்கையினால் விஷ்ணுவென்று சொல்லப்படும்.

சாத்திகத்தி லிராசதம்பிரதான மாகும்போது அதிற் பிரதிவிம்பித்த வீசுரன் சகத்தைச் சிருஷ்டிக்கையி ஞல் பிரமாவென்று சொல்லப்படும். சாத்திகத் திற் ருமதம் பிரதானமாகும்போது அதிற் பிரதி விம்பித்த வீசுரன் சகத்தை யுபசங்காரம் பண்ணு கையிஞல் உருத்திரனென்று சொல்லப்படும். இப் படி மூலப்பிரகிருதியின் சாத்திககுணகற்பனை சொ ல்லப்பட்டது.

இனி மூலப்பிரகிருதியி னிராசதகுண மனேக ரூபமாய்ப் பிரிந்து அவித்தைகளென்றுஞ் சீவகா ரண சரீரங்களென்றும் ஒன்றுக்கொன்று தாரதன் மியமாகச் சொல்லப்படும். இந்த அவித்தைக ளிட த்திஞும் மலினசலப்பிரதி விம்பம்போலப் பிரம சைதன்னியம் பிரதிவிம்பிக்கும். இந்த விம்பசை தன்யங்களைக் கிஞ்சிக்ஞனென்றுஞ் சீவசிதாபாசனெ ன்றும் பிராக்ஞனென்றுஞ் சொல்லப்படும். இந்த அவித்தைகளிடத்திலேயும் இராசதத்திற் சாத்தி கம் இராசதத்தி லிராசதம் இராசதத்திற் ருமத மென்று மூன்று குணமுண்டு. இராசதத்திற் சாத் திகம் பிரதானமாகும்போது அதிற் பிரதிவிம்பித்த சிதாபாசன் தத்துவக்ஞான நிஷ்டனுவன். இராச தத்திலிராசதம் பிரதானமாகும்போது அதிற் பிரதி விம்பித்த சிதாபாசன் காமக்குரோதபராயக் கன் மநிஷ்டனுவன். இராசதத்திற் ருமதம் பிரதான

மாகும்போது அதிற் பிரதி விம்பித்த சிதாபாசன் சோம்பல்நித்திரை மயக்கங்களையடைவன். இப்படி மூலப்பிரகிருதியி னிராசதகுண கற்பனை சொல்லப்பட்டது.

இனி மூலப்பிரகிருதியின் றாமத குணத்திற்கு ஆவரணம் விட்சேபமென் றிரண்டு சத்திகளுண்டு. இதில் ஆவரணசத்தியென்பது தத்துவக்ஞானியை யும் ஈசுரனையுந் தவிர மற்றச் சீவருக்கெல்லாஞ் சரீரத்திரயம் சிதாபாசன் சாட்சி சைதன்யங்களை யொன்றுக்கொன்று பேதந் தெரியவொட்டாமல் மறைக்கும். இதனால் மறைபட்ட சீவன் இருபத்தொன்பது தத்துவங்களையு மொருமைப்பாடாக நானென் றபிமானிப்பன். இந்தவபிமானத்தை யகங்காரக் கிரந்தியென்றும் சம்சாரபந்தமென்றுஞ் சொல்லப்படும். சற்குருகடாட்சத்தினாலே இந்த ஆவரண நீங்கி இருபத்தொன்பது தத்துவத்திற்கு மொன்றுக்கொன்று பேதந்தெரிகின்றதே முத்தி. இப்படி ஆவரண சத்தியின்காரியஞ் சொல்லப்பட்டது.

இனி விட்சேப சத்தியினிடத்திலுஞ் சத்த தன்மாத்திரையான வாகாசம் பிறந்தது. ஆகாசத்திலும் பரிசதன்மாத்திரையான வாயுபிறந்தது. வாயுவிலும் ரூபதன்மாத்திரையான அக்கினிபிறந்தது. அக்கினியிலும் ரசதன்மாத்திரையான அப்புப்பிறந்தது. அப்புவிலும் கந்ததன்மாத்திரையான பிரு

துவிபிறந்தது. இந்த சூட்சுமபஞ்சபூதத்திற்குக் காரணமாயிருக்கின்ற விட்சேப சத்தியினிடத்திலே தாமதத்திற் சாத்தீகம் தாமதத்தி லிராசதம் தாமதத்திற்றாமதமென்று அற்பங்கருவிருந்தபடியினாலே அதன் காரியமான இந்தத் தன்மாத்திரையான பஞ்சபூதங்களும் முக்குணத்துடனே பிறந்தன. இந்தப்பஞ்சபூதங்களுக்குத் தன்மாத்திரைகளென்றும் அபஞ்சீகிர்த பூதங்களென்றுஞ் சூட்சும பூதங்களென்றும் முக்குணபூதங்களென்றுஞ் சாத்திரங்களிலே சொல்லப்படும்.

இந்தச் சூட்சுமபூதங்களினின்று சூட்சும சரீரங்களுந் தூலபூதங்களும் பிறந்தன. அதெங்ஙனென்னில் ஆகாசமுதலான பஞ்சபூதங்களினுடைய சாத்தீகாம்சத்திலே பூதத்திற் கோரொருமாத்திரையெடுத்து ஒன்றாகக் கூட்டிவைத்தது அந்தக்கரணம். இந்த அந்தக்கரணத்தி லாகாசத்தினம்சங் கூடினதற் கடையாளம். இந்த அந்தக்கரணமும் ஆகாசத்தைப்போலச் சகலமான கேள்விக்கு மிடங்கொடுத்துத் தரிக்கின்றது. இப்படித் தரிக்கின்ற விருத்திக்குத் தேயுசுவென்று பெயர். இந்தவந்தக்கரணத்தில் வாயுவினம்சங்கூடினதற் கடையாளம். இந்த வந்தக்கரணமும் வாயுவைப்போல வலைகிறது. இப்படி யலைகின்ற விருத்திக்கு மனமென்று பெயர். இந்தவந்தக்கரணத்தில் அக்கினியினம்சங்

கூடினதற் கடையாளம். இந்த வந்தக்கரணமும் அக்கினியைப்போல இது இன்னதென்று விளக்கு விக்கிறது. இப்படி விளக்குவிக்கின்ற விருத்திக்குப் புத்தியென்றுபெயர். இந்தவந்தக்கரணத்தில் அப்புவினம் சங்கூடினதற் கடையாளம். இந்தவந்தக் கரணமும் அப்புவைப்போல விடயங்களிற்பற்றி யிழுக்கின்றது. இப்படி இழுக்கின்ற விருத்திக்குச் சித்தமென்று பெயர். இந்த வந்தக்கரணத்திற் பிரு துவியினம் சங்கூடினதற்கடையாளம். இந்தவந்தக் கரணமும் பிருதுவியைப்போலக் கடினமாகநின்று நானென்று அபிமானிக்கின்றது. இப்படி அபிமா னிக்கின்ற விருத்திக்கு அகங்காரமென்று பெயர்.

இன்னம் ஆகாசமுதலான பஞ்சபூதங்களினு டைய சாத்திகாம்சத்திலே பூதத்திற் கோரோருமா த்திரை எடுத்துத் தனித்தனியே வைத்தது சுரோ த்திராதி ஞானேந்திரியமென்று சொல்லப்படும். இதிற் சுரோத்திர மாகாசத்தினம் சமானபடியினு லே யாகாசத்தின் குணமான சப்தமாத்திரத்தை யறியும். துவக்கு வாயுவினம்சமானபடியினுலே வா யுவின்குணமான பரிசமாத்திரத்தையறியும். சட்சு அக்கினியி னம்சமானபடியினுலே அக்கினியின் குணமான ரூபமாத்திரத்தை யறியும் சிங்குவை யப்புவி னம்சமானபடியினுலே அப்புவின் குண

மான ரசமாத்திரத்தை அறியும். ஆக்கிராணம் பிருதுவியினம்சமானபடியினாலே பிருதுவியின் குணமான கந்தமாத்திரத்தை யறியும் இப்படி யைந்துமொன்றோடொன்று கூடாதபடியினாலே ஒன்று மற்றொன்றின் குணங்களைக் கிரகிக்கவறியாது. அந்தக்கரணத்தி லைந்துமாத்திரையு மொன்றாய்க் கூடினதுகொண்டு ஐந்திந்திரியத்தினாலும் ஐந்துவிடயத்தையும் அறியும். இந்தச் சாத்தீககுணத்தி லுண்டான வந்தக்கரணமைந்தும் ஞானேந்திரிய மைந்துமாகப் பத்துஞ் சாத்திகாம்சமானபடியினாலே ஞானசாதனமாயிற்று.

இன்னம் ஐந்து பூதத்தினுடைய விராசதாம்சத்திலே பூதத்திற் கோரொருமாத்திரையெடுத்து ஒன்றாகக்கூட்டிவைத்தது வியானாதி பஞ்சவாயுக்களாயின. இதில் வியானவாயு ஆகாசத்தினம்சமானபடியினாலே ஆகாசத்தைப்போலச் சர்வாங்கமும் வியாபித்திருக்கும். பிராணவாயு வாயுவினம்சமானபடியினாலே வாயுவைப்போல இருதயத்திலிருந்து நாசியாதிபரியந்தம் அலையும். அபானவாயு அக்கினியினம்சமானபடியினாலே அக்கினியைப்போலச் சாடராக்கினியாக வுஷ்ணித்துக் கொண்டு குதத்தைப்பற்றி நின்று உண்ட அன்னபானாதிகளைச் சீரணிப்பிக்கும். சமானவாயு அப்புவினம்சமானபடியினாலே சரீரநடுவான நாபித்தானத்தினின்று

ட அன்னபானாதிகளைச் சகல நாடிகளிலும் ப்புவைப்போல இழுக்கும். உதானவாயு பிருது னம் சமானபடியினாலே கண்டத்தைப்பற்றி நி பிருதுவியைப்போலக்கடினமாக நின்று கடை ம். இந்தப் பஞ்சவாயுக்களையுமல்லாமல் வாந்தி ணிவைக்கின்றவன் நாகனென்றும், இமைத்து ழிக்கின்றவன் கூர்மனென்றும், குறுகுறுத்துத்து மூகின்றவன் கிரிகரனென்றும், கொட்டாவிக் காள்ளுகின்றவன் தேவதத்தனென்றும், வீங்கு க்கின்றவன் தனஞ்சயனென்றும் வேறேயைந்து ாயுக்களுண்டென்று சிலர் சொல்லுவர். இந்த வைந்தும் பிராணனுடைய தொழிலானபடியினா லே வேறல்ல.

இன்னம் ஆகாசமுதற் பஞ்சபூதங்களினுடைய விராசதாம்சத்திலே பூதத்திற் கோரொருமாத்திரை யெடுத்துத் தனித்தனியேவைத்தது வாக்காதிகன்மேந்திரியமென்று சொல்லப்படும். இதிலாகாசத்தினிடமாக வாக்குவசனிக்கும். வாயுவினிடமாகப் பாணியிடுதலேற்றல் செய்யும். அக்கினியினிடமாகப்பாதம் நடக்கும். அப்புவினிடமாகப் பாயுரு மலசலாதிகளை வெளியிலே யிழுக்கும். பிருதுவியினிடமாக வுபத்தஞ் சுகத்தைப் பண்ணும். இந்த வைந்தும் தனித்தனியே யிருந்தது கொண்டு மறு தொழிற் செய்யமாட்டாது. வியானவாயு வைந்

து மாத்திரையு மொன்றாய்க் கூடினது கொண்டு கன்மேந்திரிய மைந்தின் வழியிஞலு மைந்தொ ழிலையுஞ் செய்து முடிக்கின்றது. இந்த வாயுக்க ளைந்துங் கன்மேந்திரிய மைந்தும் ஆகப்பத்து மி ராசதர்ம்சமான படியிஞற் கிரியாசாதனமாயின.

அந்தக்கரணம்-ரு-ம், ஞானேந்திரியம்-ரு-ம், வாயுக்கள்-ரு-ம், கன்மேந்திரியம்-ரு-ம், ஆக-உ0-தத் துவமும் சூட்சுமசரீரமென்றுசொல்லப்படும். இந் தச்சூட்சுமசரீரத்தை மாயாப்பிரதிவிம்பராக விருக் கின்றவீசுரன் அவித்தையாப்பிரதிவிம்பராயிருக்கி ன்ற சீவருக்குப்பேருக்கொவ்வொரு சரீரஞ் சிருட் டித்துக்கொடுத்தார். அப்போது பஞ்சபூதத்திஞு டைய சாத்தீகாம்சமு மிராசதாம்சமுஞ் செலவழி ந்தன. தாமத குணமாத்திரஞ் சேடித்தது. சூட்சம சரீரம் வாங்காத சீவருக்கெல்லாமின்னமொரு சிரு ட்டிக்காகட்டு மென்று நிறுத்திஞர். இப்படிச் சூ ட்சும சரீரஞ்சொல்லப்பட்டது.

இனித் தூல பூத வுற்பத்தி சொல்லுகிறேம். அதெங்ஙனெனில் மிஞ்சின தாமதமாயிருக்கின்ற வைந்து பூதத்தையு மொன்றிரண்டாகப் பகுத்து முதற் பாதி யைந்தையு மொன்று நாலாக்கி யிரண் டாம் பாதி யைந்துடனே தன்னம் சத்துடனே கூட்டாமல் மற்ற நாலு பூதத்துடனும் பூதத்திற் கரைக்கால் மாத்திரையாகக் கொடுக்கின்றது பஞ்

ண மென்று சொல்லப்படும். இப்படிப் பஞ்சீ
ம் பண்ணின தூல பூதங்களிலே ஆகாசத்தி
பரிசரூபரச கந்த மாகிய நான்கு குணமும் வி
ப்பியமானபடியினால் அதிரிசியமாய்ப்போக நிச
மாகிய சப்தமும் வாயுவிலே ரூபரசகந்த மாகி
ன்றுகுணமும் வியாப்பியமானபடியினால் அதி
மாய்ப்போகக் காரணகுணமாகிய சப்தமும்
குணமாகிய பரிசமும் அக்கினியிலேரசகந்தமா
விரண்டுகுணமும் வியாப்பிய மானபடியினால்
திரிசியமாய்ப்போகக் காரணகுணமாகிய சப்தப்
சமும் நிசகுணமாகிய ரூபமும் அப்புவிலே கந்
குணம் வியாப்பியமானபடியினால் அதிரிசியமாய்
பாகக் காரணகுணமாகிய சப்தப்பரிசரூபமும் நிச
ணமாகிய ரசமும் பிருதுவியிலே சப்தப் பரிசரூ
ரசகந்தமுந் தோன்றின.

முன் சூட்சுமபூதத்திலிருந்து சூட்சும சரீரம்
றந்தாற்போலப் பஞ்சீகரணம் பண்ணின தூலபூ
த்தினின்று மாறுதத்துவமாய் நால்வகைப் பிறப்
பாய் எழுவகைச்சாதியா யிருக்கின்ற தூலசரீரங்கள்
றந்தன.

இதிலாறுதத்துவமாவ தேதென்றால் சர்மம்,
உதிரம், மாமிசம், சஞயு, அத்தி, மச்சை இந்தஆ
றுவகையுந் தூலசரீரம். நால்வகைத்தோற்றமாவ

தேம்தென்றால் சராயுசம், அண்டசம், சுவேதசம், உற்பிச்சம் ஆகநாலு. மூன்றுசாதி யெதென்றால் இகலோக பரலோக புத்தி இருவகையுங் கொடுக்கி ன்ற மாநுடசரீரம் உத்தமசாதி, பரலோக புத்தி யைமறைத்து இகலோகபுத்திமாத்திரம் அறிகின்ற பசுபட்சிமுதலானவை மத்திமசாதி, இரண்டுலோ கத்துப்புத்தியையும்மறைத்திருக்கின்ற மரங்கொடி செடி அதன்மசாதி. இப்படிப் பிருதுவிதத்துவமா யிருக்கின்ற பூலோகத்திற் கண்டாற்போல அப்பு அக்கினி வாயு ஆகாசமென்னப்பட்ட தத்துவங்க ளினும் நிரைநிரையே பிதிர்லோகம் தெய்வலோக ம் யட்சகந்தருவலோகம் சித்தர் லோகங்களினும் நட்சத்திரமாகத்தோற்றுகின்ற சந்திரன்முதலான பிதிர்க்கள் சூரியன்முதலான தேவதைகள் கந்தரு வர் சித்தர் என்னப்பட்டதெல்லா முத்தமசரீரம். காமதேனு, அயிராவதம், அன்னம், கருடன்முத லாயின மத்திமசரீரம். கற்பகவிருட்சம், பாரிசாத முதலாயின அதன்மசரீரம்.

இந்தத்தூலசரீரமே அன்னமயகோசம். சூட் சுமசரீரம் மூன்றுகோசமா யிருக்கும். அதெங்ங னென்னில் பிராணவாயுவுங் கன்மேந்திரியமுங்கூ டிப் பிராணமயகோசம், மனதும் ஞானேந்திரியமு ங்கூடி மனோமயகோசம், புத்தியும் ஞானேந்திரிய முங்கூடி விஞ்ஞானமயகோசம், காரணசரீரமே

ஆமயகோசம். இப்படிப்பஞ்சகோசஞ் சொல்
-டன.
ஆறுதத்துவமாயிருக்கின்ற தூலசரீரத்திலே
மசரீர மிருக்கின்றதெப்படி யென்னில் கரு
கிரியமான வாக்கும் ஞானேந்திரியமான சி
யும் வாயிலிருக்கும். உதானவாயுவும் மன ஆக
-த்திலிருக்கும். பிராணவாயுவும் புத்தியும்
கயத்தில்இருக்கும். சமானவாயுவுஞ்சித்தமும்
யிலிருக்கும். அபானவாயுவும் பாயுருவுங் குத
ம இருக்கும். வியானவாயுவும் ஞானேந்திரிய
ா துவக்கும் அகங்காரமுஞ் சர்வாங்கமும்வியா
கிருக்கும். உச்சியிலேதேயுசுங் கருவிழி நடுவியி
சட்சுயிந்திரியமும் காதுக்குள்ளேசுரோத்திர இ
ரியமும் மூக்குக்குள்ளே ஆக்கிராண இந்திரியமு
ழுத்துக்குமேற் றனித்தனியே யிருக்கும். கழு
க்குக்கீழே கைகால் குய்யத்திம்பாணிபாதம் உ
தம் மூன்றும் தனித்தனியேயிருக்கும். இப்படி
தூலசரீரதத்துவம்-கூ-ம், அதிம்குடிபுகுந்த சூட்-
ம சரீரதத்துவம்-உ0-ம், ஆகதத்துவம் - உகூ-ம்,
ஞ்சபூதத்தின் காரியமானபடியினாலே ஒருமைப்
-டாகக் காரியசரீரமென்று சொல்லப்படும்.

காரணசரீரமும்சிதாபாசனும் சாக்கிரத்திலே
ந்தஇருபத்தாறு தத்துவத்துடனே கலந்துநின்ற
பாது விசுவனென்றும் வியவகாரிக சீவனென்று

ஞ் சொல்லப்படும். சொற்பனத்திலே தூலசரீரத்
தைக்கைவிட்டு அந்தக்கரணத்துடனே கூடிநின்ற
போது தைசதனென்றும் பிராதிபாதிக சீவனென்
றும் சொற்பனகற்பிதனென்றுஞ் சொல்லப்படும்.
சுழுத்தியிலே காரியசரீர பிரபஞ்சத்தையுங் கைவிட்
டுக்காரணசரீரத்தைமாத்திரம் பொருந்தி யிருக்கும்
போது பிராக்ஞனென்றும் பாரமார்த்திகசீவனென்
றுஞ்சொல்லப்படும். பிரமசைதன்னியஞ் சாக்கிரத்
துக்குச்சாட்சியா யிருக்கும்போது சிவாத்மாவென்
றுஞ்சொற்பனத்துக்குச் சாட்சியா யிருக்கும்போ
து அந்தராத்மாவென்றுஞ் சுழுத்திக்குச்சாட்சியா
யிருக்கும்போது பரமாத்மாவென்றும் அவத்தாத்
திரயசாட்சியா யிருக்கும்போது ஞானாத்மாவென்
றுங் கூடஸ்தனென்றுஞ் சொல்லப்படும். இப்படிச்சீ
வனுக்கு மூன்றுசரீரமும் மூன்றவத்தையுஞ்சொல்
லப்பட்டது.

இனி ஈசுரனுக்கு மூன்றுசரீரமும் மூன்றவத்
தையுஞ்சொல்லும்படி. லோககற்பனையாகத் தோற்
றுகின்ற தூலபஞ்சபூதங்களும் அதிற்றோன்றினமூ
ன்றுசாதியா யிருக்கின்ற தூலசரீர சமட்டியுங்கூடி
ஈசுர தூலசரீரமென்றும் விராட்டென்றுஞ்சொல்
லப்படும். இதனுடனேகூடிச் சாக்கிராவத்தையை
ப்பொருந்தி யிருக்கின்ற ஈசுரன் வைசுவானரனெ
ன்றும் இந்த இருவகைக்கும் அதிஷ்டானசைதன்

...ம்மாவென்றுஞ் சொல்லப்படும். சூட்சமபூத ...ரும் அதிற்றோன்றின சூட்சுமசரீர சமட்டி ... ஈசுரசூட்சுமசரீரமென்றும் இரணியகர்ப்ப ...மும் சொல்லப்படும். இதனுடனேகூடிசொ ...த்தையைப் பொருந்தியிருக்கின்ற வீசுரன் ...த்மாவென்றும் இந்த இருவகைக்கும் அதி ...னசைதன்யம் விஷ்ணுவென்றுஞ் சொல்லப் ... இந்தத்தூலசூட்சுமவிருவகைக்கும் வாசனை ...கூடினமாயை யீசுரகாரண சரீரமென்றும் ...யாகிருதமென்றுஞ் சொல்லப்படும். இதனு ...கூடிச் சுழுத்திபவத்தையைப் பொருந்தியிரு ...றவீசுரன் அந்தரியாமியென்றும் இந்த இருவ ...கும் அதிட்டான சைதன்யம் உருத்திரனென் ...சொல்லப்படும். சீவன் தன்மூன்றவத்தையிலு ...ன்மூன்றுசரீரமாக இருக்கின்ற விருபத்தேழுத ...வத்துடனும் நானென்று கலந்து நிற்கின்றாற் ...லவீசுரனுந் தம்முடைய மூன்றுசரீரமா யிரு ...ற முப்பத்திரண்டு தத்துவத்துடனும் மூன்ற ...தையிலுங் கலந்துநிற்பார்.

ஆகையினால் சீவசிதாபாசன் தன்சரீரமாத்திர ...கலந்து நிற்பன். ஈசுரன் தம்முடைய சரீரமாகி ...கலசரீரங்களோடுஞ் சகலபிரபஞ்சங்களோடுங் ...ந்து நிற்பர். இந்தவிருவகைக்குஞ் சாட்சியாயி ...கின்ற பிரமசைதன்யமுஞ்சகலசரீரத்திலுஞ்சக

லபிரபஞ்சத்திலும் நிறைந்து அப்பாலும் பத்துத்
திக்கையும் அதிக்கிரமித்து எல்லையற்றிருக்கும்.

சீவனுக்குத் தூலசரீரவியவகாரத்துக்கு அன்
னமயமான சட்கோசதத்துவம்-கூ, சூட்சுமசரீரத
த்துவம்-உ0,சீவன்,ஈசுரன்,அவித்தை,வித்தை,பிர
மம்-ரு,ஆகதத்துவம்-ஙக,சூட்சுமசரீர வியவகாரத்
துக்குசூட்சுமசரீரதத்துவம்-உ0,சீவன்,ஈசுரன்,அ
வித்தை, வித்தை, பிரமம்-ரு,ஆகத்தத்துவம்-உரு,
காரணசரீரவியவகாரத்துக்குசீவன்,ஈசுரன்,அவித்
தை,வித்தை,பிரமம் ஆக-ரு, சீவவியவகாரத்துக்கு
சீவன், ஈசுரன், பிரமம்ஆக-ங, சாட்சி வியவகாரத்
துக்குசாட்சி-க, ஈசுரனுக்குத் தூலசரீர வியவகார
த்துக்குச் சமட்டி அன்னமயகோச தத்துவம்-கூ, ச
மட்டி சூட்சுமசரீரதத்துவம்-உ0,சமட்டி,சீவன் அ
வித்தை-உ,ஈசுரன்,வித்தை,பிரமம்-ங,பூதம்-ரு,ஆ
கத்தத்துவம்-ஙகூ,சூட்சுமசரீர வியவகாரத்துக்கு
ச்சமட்டி சூட்சுமசரீரதத்துவம்-உ0,சமட்டி சீவன்
அவித்தை-உ,சூட்சுமபூதம்-ரு,ஈசுரன்,வித்தை,பிர
மம்-ங,ஆகத்தத்துவம்-ங0,காரணசரீர வியவகார
த்துக்கு,ஈசுரன்,வித்தை,பிரமம்-ங,ஈசுரவியவகார
த்துக்கு ஈசுரன் பிரமம்-உ,பிரமவியவகாரத்துக்கு
பிரமம்-க,இந்திரியவியவகாரத்துக்கு இந்திரியம்க-
சட்கோசதத்துவம்-கூ,கரணம்-ரு,வாயு-ரு,சீவன்,
ஈசுரன்,அவித்தை, வித்தை,பிரமம்-ரு,ஆகத்தத்து

உ,மனோராச்சியவியவகாரத்துக்குக்கரணம்
ன்,ஈசுரன்,அவித்தை,வித்தை,பிரமம்-ரு,ஆக
வம் - ௬0, இப்படித் தத்துவங்களினுடைய
முறமும் நிலையுஞ்சொல்லப்பட்டன.

னித் தத்துவமொடுங்குகின்றவழி சொல்லு
ம். அதெங்ஙன மென்னில் சகல சீவர்களிட
இருக்கின்றதூலசரீரங்களும் தனக்காதார
ாலபூதங்களுடனேமடிந்து பூதமாத்திரமா
க்கும். இந்தத்தூலபூதங்களும் பஞ்சீகரணம்
த் தன்மாத்திரையான தாமதகுணபூதங்களா
கும். அப்போது கேவல விரணிய கர்ப்பாவத்
யன்று சொல்லப்படும். சூட்சுமசரீரம் இருப
அவமுங் கட்டுவிட்டுப் பூதங்களினுடையசா
குணமும் இராசத குணமுமாக வொடுங்கும்
மனென்னில் சகல பிராணிகளிடத்திலுமி
ற ஆகங்காரமும் ஆக்கிராணமும் உதான
முபத்த விந்திரியமும் பிருதுவியி லொடுங்
த்தமும் சிங்குவையும் சமானனும் பாயுரு
அப்புவிலொடுங்கும். புத்தியும் சட்சுவும் அபா
ம் பாதமும் அக்கினியிலொடுங்கும். மனதும்
ும் பிராணனும் பாணியும் வாயுவிலொடுங்
தேயுகம் சுரோத்திரமும் வியானனும் வாக்கு
சத்தி லொடுங்கும். அப்போது பழையபடி
முக்குணபூதங்களாகும், இந்தச் சூட்சுமபூதங்

களும்பிருதுவி அப்புவிற்கரைந்தொடுங்கும். அப்புவும் அக்கினியிற்சுவறியொடுங்கும். விளக்குப்போல அக்கினியும் வாயுவிலணைந்தொடுங்கும். வாயுவும் ஆகாசத்தி லோய்ந்தொடுங்கும். ஆகாசமும்விட்சேபசத்தியிலொடுங்கும். ஆவரணசத்தியும் விட்சேபசத்தியும் மூலப்பிரகிருதியின் தாமதகுணமாத்திரமாய் ஆலமரம் ஆலவிரையி லொடுங்கினாற்போல இன்னம்ஒருசிருட்டிக்கு வித்தாக மாயையிலும் அவித்தையிலும் ஒடுங்கும். அதி னுண்மையான மூலப்பிரகிருதி யென்றுசொல்லப்பட்ட விந்து தத்துவத்திலொடுங்கும். அந்த விந்துவும் பாம்பென்கிறபெயர்போய்ப் பழுதையாய்க் கண்டாற்போலத் தனக்கதிட்டானசைதன்யமான பிரமசைதன்யமாத்திரமாக வொடுங்கும். இப்படிப் பொய்யெல்லாம் மெய்ப்பொரு ளொன்றாகக்கண்டு அதுவே சுபாவசித்தமாய் நிசமாகவிருக்கின்ற தன்வடிவெனக்கண்டுதெளிந்து கவலைகெட்டிருக்கின்றவனே சீவன்முத்தன். இப்படித் தத்துவங்களின் ஒடுக்கஞ் சொல்லப்பட்டது.

இப்படித்தோற்றி யொடுங்குகின்ற தத்துவம் ௯௬, அதெங்ஙனெனின்பூதம்-ரு, தூலசரீரதத்துவம்-௬, சூட்சுமசரீரதத்துவம்-௨௦, காரணசரீரமானமாயைஅவித்தை-௨, இதிற்பிரதிவிம்பித்த சீவன்

வம்-உஉ,மஞேராச்சிய வியவகாரத்துக்குக்காரணம் ரு,சீவன்,ஈசுரன்,அவித்தை,வித்தை,பிரமம்-ரு,ஆக த்தத்துவம் - கO, இப்படித் தத்துவங்களினுடைய தோற்றமும் நிலையுஞ்சொல்லப்பட்டன.

இனித் தத்துவமொடுங்குகின்றவழி சொல்லு கிறோம். அதெங்ஙன மென்னில் சகல சீவர்களிட த்திலே இருக்கின்றதூலசரீரங்களும் தனக்காதார மான தூலபூதங்களுடனேமடிந்து பூதமாத்திரமா க ஒடுங்கும். இந்தத்தூலபூதங்களும் பஞ்சீகரணம் விட்டுத் தன்மாத்திரையான தாமதகுணபூதங்களா கமிஞ்சும். அப்போது கேவல விரணிய கர்ப்பாவத் தையென்று சொல்லப்படும். சூட்சுமசரீரம் இருப துதத்துவமுங் கட்டுவிட்டுப் பூதங்களினுடையசா த்விககுணமும் இராசத குணமுமாக வொடுங்கும் அதெங்ஙனென்னில் சகல பிராணிகளிடத்திலு மி ருக்கின்ற அகங்காரமும் ஆக்கிராணமும் உதான வாயுவுமுபத்த விந்திரியமும் பிருதுவியி லொடுங் கும். சித்தமும் சிங்ஙுவையும் சமானனும் பாயுரு வும் அப்புவிலொடுங்கும். புத்தியும் சட்சுவும் அபா னனும் பாதமும் அக்கினியிலொடுங்கும். மனதும் துவக்கும் பிராணனும் பாணியும் வாயுவி லொடுங் கும். தேயுசும் சுரோத்திரமும் வியானனும் வாக்கு ம்ஆகாசத்தி லொடுங்கும். அப்போது பழையபடி யே முக்குணபூதங்களாகும். இந்தச் சூட்சுமபூதங்

களும்பிருதுவி அப்புவிற்கரைந்தொடுங்கும். அப்புவும் அக்கினியிற்சுவறியொடுங்கும். விளக்குப்போல அக்கினியும் வாயுவிலணைந்தொடுங்கும். வாயுவும் ஆகாசத்திலோய்ந்தொடுங்கும். ஆகாசமும்விட்சேபசத்தியிலொடுங்கும். ஆவரணசத்தியும் விட்சேபசத்தியும் மூலப்பிரகிருதியின் தாமதகுணமாத்திரமாய் ஆலமரம் ஆலவிரையிலொடுங்கினாற்போல இன்னமொருசிருட்டிக்கு வித்தாக மாயையிலும் அவித்தையிலும் ஒடுங்கும். அதினுண்மையான மூலப்பிரகிருதியென்றுசொல்லப்பட்ட விந்துதத்துவத்திலொடுங்கும். அந்த விந்துவும் பாம்பென்கிறபெயர்போய்ப் பழுதையாய்க் கண்டாற்போலத் தனக்கதிட்டானசைதன்யமான பிரமசைதன்யமாத்திரமாகவொடுங்கும். இப்படிப் பொய்யெல்லாம் மெய்ப்பொருளொன்றாகக்கண்டு அதுவே சுபாவசித்தமாய் நிசமாகவிருக்கின்ற தன்வடிவெனக்கண்டுதெளிந்து கவலைகெட்டிருக்கின்றவனே சீவன்முத்தன். இப்படித் தத்துவங்களின் ஒடுக்கஞ் சொல்லப்பட்டது.

இப்படித்தோற்றி யொடுங்குகின்ற தத்துவம் ௩௬, அதெங்ஙனெனனில்பூதம்-ரு, தூலசரீரதத்துவம்-௬, சூட்சுமசரீரதத்துவம்-உ0, காரணசரீரமானமாயைஅவித்தை-உ, இதிற்பிரதிவிம்பித்தசீவன்

ஈசுரன்-௨, இதற்கெல்லாம் அதிட்டானசைதன்யமா
யிருக்கின்ற பிரமம்-௧, ஆகத்தத்துவம்-௩௬.

இதிற்சீவருக்குச் சமுதாயம். பூதம்-௫-மாயை
௧-மாயாப்பிரதிவிம்பரான ஈசுரன்-௧-பிரமம்-௧-ஆ
இந்த எட்டுஞ்சகலபிராணிகளுக்குஞ் சமுதாயமாக
வனுபவிக்கப்படும். மற்ற விருபத்தெட்டும் அவன
வனுக்குப் பிறத்தக்காக வனுபவிக்கப்படும். அதெ
ங்ஙனென்னில் பிருதுவிதத்துவம் ஒன்று இறக்கில்
எல்லாருக்கும் ஆதாரமில்லை. மழைமறுக்கில் எல்லா
ருக்குஞ்சலமில்லை. தேயுவில்லாதிருந்தால் பாகமில்
லை. வாடை-தென்றல் இல்லாவிட்டால் வாயுவியக்க
மில்லை. ஆகாசமிறக்கில்ஒருவருக்கும் அவகாசமில்
லை. மாயையும் மாயாப்பிரதிவிம்பருமிறக்கிற் சகலச
மயத்துக்குந் தெய்வமில்லை. பிரமமில்லையோஒருத்
தருக்குமறிவில்லை. ஆகையால் இந்தஎட்டும் எல்லா
ருக்குஞ் சமுதாயம். பிறத்தக்கெங்ஙனென்னில் ஒரு
த்தனுக்குத் தூலசரீரமிறக்கில் எல்லாருக்குந் தூ
லசரீரம்இறவாதபடியினாலும் சூட்சுமசரீரத்திலொ
ருவனுக்கு அங்கவைகுல்லியம் வந்தால் எல்லாருக்
கும் வாராதபடியினாலும் முத்தராயிருக்கின்ற சுக
ர் வாமதேவர் முதலானபேருக்கு அவித்தையுஞ்சீ
வனு மிறந்துபோயிருக்க மற்றபேருக்கெல்லாம் அ
வித்தையுஞ்சீவனு மிறவாதபடியினாலும் இந்தவிரு

பத்தெட்டுத் தத்துவமும் அவனவனுக்கு பிறத்த க்கென்கின்றதிலே சந்தேகந்தேவையில்லை.

இந்தத்தத்துவம் முப்பத்தாறில் எப்போதுந் தானாகவே காணப்பட்டதத்துவம்-க, எப்போதுந் தனக்கு அன்னியமாகவே காணப்பட்ட தத்துவம் எ, எப்போதுந்தானாகவுந் தனக்குஅன்னியமாகவு ம் அனுபவிக்கப்பட்ட தத்துவம்-உஅ, அதெங்ங னென்னில் அவத்தாத்திரய சாட்சியா யிருக்கின்ற பிரமசைதன்னியம் எல்லாவவத்தையிலும் தானாக வேவிளங்குகையினாலும் மற்றதத்துவங்கள் போல த்தனக்கு அந்நியமாகக் காணப்படாதபடியினாலும் பிரமசைதன்ய மொன்றுமே தானாகவிருக்கப்பட்ட து. பஞ்சபூதம்மாயை மாயாப்பிரதிவிம்பர் ஆகஎழு ம் தன்றொழிலான வெட்டுக்கொத்துழவு பஞ்சகி ருத்தியம் தசாவதார முதலானதொழில்க ளொருக் காலுந் தன்னுடைய தொழிலாகக் காணப்படாதப டியினாலும் இந்தஎழுதத்துவமுந் தனக்கு அன்னி யமேயல்லாமல் தானாகமாட்டாது. மற்றஇருபத்தெ ட்டுதத்துவமும் நான் பிராமணன் நான் க்ஷத்திரிய ன் நான்வைசியன் நான்சூத்திரன் நான்பிரமச்சாரி நான்கிருகஸ்தன் நான்வானப்பிரஸ்தன் நான்சந்நி யாசி நான்ஆண்பெண் கறுவல் சிவலை சட்டையன் நெட்டையன் நான்பருத்தேன் இளைத்தேனென்று

தானாகவழங்குகின்ற தூலசரீரம் ஆறுதத்துவமும் மற்றொருவேளையிலே தனக்குப் புறம்புபட்டு என் மாடென்கன் றென்றாற்போல என்சரீரம் பருத்த து இளைத்தது நரைத்தது என்சரீரம்பிறந்து இத் தனைநாள் ஆயிற்றென்று தான் வேறு தூலசரீரம் வேறாக வழங்குகின்றபடியினாலும் நான்கண்டேன் கேட்டேன் தொட்டேன் போகித்தேன் கொடுத் தேன் வாங்கினேன் நடந்தேன் புசித்தேன் சிந்தி த்தேன் நிச்சயித்தேன் இந்தப்பஞ்சத்துக்குச் சீவி த்தேனென்று தானாகவழங்குகின்ற சூட்சுமசரீரத த்துவம் இருபதும் மற்றொருவேளையிலே தனக்கு ப்புறம்புபட்டு என்வீடென்னுடைமை யென்றாற் போல என்கண் ணென்கா தென்மூக் கென்னாக்கெ ன்கை யென்காலென்மன மென்புத்தி யென்னகங் காரமென்சித்த மென்பிராணனென்று தான்வேறு அவைகள்வேறாகவழங்குகின்றபடியினாலும் நானறி வேனறியேனென்று தானாக வழங்குகின்ற வஞ்ஞா னமுஞ்சிதாபாசனு மற்றொருவேளையிலே தனக்கு ப்புறம்புபட்டு என்னஞ்ஞானம்என்சீவனென்றுவ ழங்குகின்ற படியினாலும் இந்த இருபத்தெட்டுதத் துவமுந் தானாகவுந்தனக்கன்னியமாகவும் வழங்கு கின்றது சித்தம். இப்படிச்சொன்ன குருவைப்பார் த்து சிஷ்யன்கேட்கும்படி இந்த இருபத்தெட்டுத த்துவமுந்தானானாற்சாட்சியைப்போலஒருதன்மை

யாகத் தோற்றவேண்டுமே யல்லாமற் பஞ்சபூதத்
தைப்போலத் தனக்கன்னியமாகக்காணக்கணக்கில்
லை. இந்தஇருபத்தெட்டுந் தனக்கன்னியமேயானா
லெப்போதும்புறம்புபட்டேயிருக்கவேண்டுமல்லா
மல் தானாகவழங்கக்கணக்கில்லை. தானுமாய்த் தனக்
குஅன்னியமுமா யிருக்குமென்கின்றது இருட்டா
தித்தனென்றாற்போலவும் வெள்ளாள தீட்சதனெ
ன்றாற்போலவுஞ் சொன்னீர். இதுவிருத்தமென்கி
ன்ற சங்கைக்கு பரமார்த்தமாகத் தானென்கின்ற
தொருவகையும்அத்தியாசத்தினாலே தானென்கின்
றதொருவகையும் ஆக இருவகையுமுண்டு. சாட்சி
சைதன்னியத்தைத் தானென்கின்றது பரமார்த்தம
ல்லாமல்உபசாரமல்ல. தனக்கன்னியமாயிருக்கின்ற
விந்த விருபத்தெட்டையுந் தானென்கின்றது சட்
டையைக் கள்ளனென்றாற்போலவும் பழுதையைப்
ப்பாம்பென்றாற் போலவும் புத்திர தாராதிகளைத்
தானென்றாற்போலவும் மயக்கமேயல்லாமல உண்
மையல்ல. ஆகையினால் அஞ்ஞானகாலந் தொடங்
கித் தானல்லவென்று காணப்பட்ட தத்துவம்-எ-
இப்போது இப்படிக்கொத்த விவேகம்பண்ணினபி
ற்பாடு தானல்லவென்று காணப்பட்ட தத்துவம்-
உஅ, ஆக இந்த முப்பத்தைந்து தத்துவங்களையும்
அதற்குச்சொன்ன குணங்குறிகளுடனே கூடக்கா
ண்கின்ற அறிவு கடத்தைப்பார்க்கின்றவன் கடத்

திற்குப் புறம்பாகவே இருந்து கடத்தைப் பார்க்கி ன்றதுபோல இந்த முப்பத்தைந்தையுங் காண்கின் றபேரறிவு முப்பத்தாறுந் தத்துவமாகிய அதுதா னென்றறிந்து அதுதானே பரமசிவனென்று தெ ளிந்தவனே சிவதரிசனமுடைய சீவன்முத்தனெ ன்று சொல்லப்படுமென்றுத்தரம்.

இப்படிப் பிரமமேதானென்றும் மற்ற முப்ப த்தைந்து தத்துவமுந் தனக் கன்னியமென்றும் பி ரித்தறியாத அவிவேகிகள் அகங்காரக் கிரந்தியி னாலே புத்திரதாராதிகள் தவிக்கின்றதைத் தான்த விக்கின்றேனென்கின்ற மூடகரம்போல விந்தஇரு பத்தெட்டினுடைய தொழிலையுந் தன்றொழிலென் றுமயங்குகின்ற படியினால் இந்த இருபத்தெட்டினா ம் ஆர்ச்சிக்கப்பட்ட புண்ணிய பாவங்களினாலுங் க ட்டுப்பட்டு அந்தக் கன்மத்தின்படியே சனனமர ணாதிசமுசாரத்திலே அடிபடுகிறோமென்று மயங் குவன். பிரமசைதன்னியமே தானென்றும் மற்றமு ப்பத்தைந்துந் தானல்லவென்றுந் தெளிந்த விவே கிக்கு அகங்காரக்கிரந்தி யற்றபடியினால் இந்த விரு பத்தெட்டினுடைய தொழிலையும் நான்செய்யவில் லையென்றும் இந்தவிருபத்தெட்டும் புசிக்கின்றதை நான்புசிக்கவில்லை யென்றுந் திடப்படத்தேறி மய க்கமற்றிருக்கின்ற படியினால் இந்த விருபத்தெட்டி

ஞலும் ஆர்ச்சிக்கப்பட்ட புண்ணியபாவங்களினின்
றும் விடுபட்டுக் கன்மமில்லாதபடியிஞல் சனனம
ரணுதி சமுசாரமில்லாமல் முத்தஞகிப் பிரமமாத்
திரமாகவே யிருப்பன். இவனைச்சீவன்முத்தனென்
றுந் திடப்பிரக்ஞனென்றும் அதிவர்ணுச்சிரமியெ
ன்றுங் குணுதீதனென்றும் பகவத் பத்தனென்றும்
பிராமணனென்றும் சொல்லுகின்ற இந்த வாறையு
ஞ் சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. சகலரும் இந்
தத்தத்துவத்தை விசாரம்பண்ணி மோட்ச மடை
யக்கடவர்கள்.

நாஞசிவவாதக்கட்டளை

முற்றுப்பெற்றது.

திருச்சிற்றம்பலம்.

சர்வஞ்சின்மயம்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ-திருவேங்கடநாதனார் அருளிச்செய்த

கீதாசாரத்தாலாட்டு.

இஃது

சமிவனக்ஷேத்திரமென்னுங்கோயிலூர்

ஸ்ரீ-முத்துராமலிங்க சுவாமிகளின்

ஆதீனத்திற்குரிய

ஸ்ரீ-சிதம்பரசுவாமிகள்

மாணாக்கர்களிலொருவராகிய

அ-இராமசுவாமிகளால்

கோயிலூர் ஏட்டுப்பிரதிப்படி

பரிசோதித்து

சென்னை:

மிமோரியல் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விய௵ சித்திரைமீ

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ-திருவேங்கடநாதனார் அருளிச்செய்த

கீதாசாரத்தாலாட்டு.

இஃது

சமிவனக்ஷேத்திரமென்னுங்கோயிலூர்

ஸ்ரீ-முத்துராமலிங்க சுவாமிகளின்

ஆதீனத்திற்குரிய

ஸ்ரீ-சிதம்பரசுவாமிகள்

மாணாக்கர்களிலொருவராகிய

அ - இராமசுவாமிகளால்

கோயிலூர் ஏட்டுப்பிரதிப்படி

பரிசோதித்து

சென்னை:

மிமோரியல் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விய௵ சித்திரைமீ

உ

கணபதிதுணை.

ஸ்ரீகிருஷ்ணாயபரப்பிர்மணேநம:

கீதாசாரத்தாலாட்டுப்பிரபந்தம்.

காப்பு.

ஐவகைப்பொருளுநான்கு கரணமுங்குணங்க ண்மூன்றுஞ், செய்வினையிரண்டுமொன்றி யாவருந் திகைப்பநின்ற, பொய்யிருளகலஞானப் பொருட்க திர்விரித்தபுத்தேள், கைவளராழிச்செங்கட் கண் ணனைக்கருத்துள்வைப்பாம்.

ஆக்கியோன்பெயர்-நூல்வந்தவழி
நூற்பெயர்-நூற்பயன்.

வெண்பா.

மாதையர்கோன்வேத நவில்வாய்வேங்கடநாதன்
காதையுறப்பார்த்தனுக்குக் கண்ணனருள்-கீதைக்
கருத்துயர்தாலாட்டாகக் கட்டுரைத்தான்யாருங்
கருத்துயர்தீர்ந்தெய்தக் கதி.

(நூல்.)

சீரரும்பரமார்த்த தெரிசனத்தையருள்செய்யப்,
பேராருந்தேசிகனாய்ப் பெருமானேவந்தவரோ. ()

திருத்தேரிற் சாரதியாய்ச் சேர்ந்திருந்துங் கீ தையினா, லருச்சுனற்குமெய்ஞ்ஞான மனைத்துமு ரைசெய்தவரோ. (உ)

உ

கணபதி துணை.

ஸ்ரீகிருஷ்ணாய பரப்பிர்மணே நம:

கீதாசாரத்தாலாட்டுப்பிரபந்தம்.

காப்பு.

ஐவகைப்பொருளுநான்கு கரணமுங்குணங்க ண்மூன்றுஞ், செய்வினையிரண்டுமொன்றி யாவருந் திகைப்பநின்ற, பொய்யிருளகலஞானப் பொருட்க திர்விரித்தபுத்தேள், கைவளராழிச்செங்கட் கண் ணனைக்கருத்துள்வைப்பாம்.

ஆக்கியோன்பெயர் - நூல்வந்தவழி
நூற்பெயர் - நூற்பயன்.

வெண்பா.

மாதையர்கோன்வேத நவில்வாய்வேங்கடநாதன்
காதையுறப்பார்த்தனுக்குக் கண்ணனருள் - கீதைக்
கருத்துயர்தாலாட்டாகக் கட்டுரைத்தான்யாருங்
கருத்துயர்தீர்ந்தெய்தக் கதி.

(நூல்.)

சீரரும்பரமார்த்த தெரிசனத்தையருள்செய்யப்,
பேராருந்தேசிகனாய்ப் பெருமானேவந்தவரோ. ( )

திருத்தேரிற் சாரதியாய்ச் சேர்ந்திருந்துங் கீ
தையினு, லருச்சுனற்குமெய்ஞ்ஞான மனைத்துமு
ரைசெய்தவரோ. (உ)

சாரதியாய்த் தேர்செலுத்தித் தனஞ்சயநா
னையினைப், பாரெனப்பார்த்தேவிசயன் பயந்துமலர்
த்தாள்வணங்கி.

(௩)

அமர்க்குவந்தசுற்றத்தா ரனைவரையுங் கொல்
வதினு, லெமக்கழியாச் சோகம்விளைந் தெய்துமெ
னவேவினவ.

(௪)

செஞ்சமரிற் பந்துசனஞ் சேதம்வருமென்றி
ரங்கி, யஞ்சினபார்த்தன் பயமாங் ககற்றவருளா
னோக்கி.

(௫)

சுற்றமறிற் சோகமெனச் சொல்லினைசற்றறிந்
தவன்போற், கற்றுணர்ந்தபேரதனுற் கலங்கார்கா
ணென்றவரோ.

(௬)

கலங்காரோ விறப்புவரிற் கற்றுணர்ந்தபேரே
னு, மலங்காமனுனிருக்கும் வகையுரையு மெனவி
னவ.

(௭)

நீயுநானும்புவிமே னிருபர்களுமெய்யுணர்வா
லாயுங்காற்பிறந்திறப்ப தார்க்குமில்லையென்றவரோ.

ஈங்கெவர்க்கும்பிறந்திறப்ப தில்லையென்றீ ரிவ்
வுலகி, னீங்குபவம்யார்க்கிதனை நிச்சயமாய்ச்சொல்
லுமென.

(௯)

இத்தரையிற்பிறந்திறப்ப தெடுத்தவுடற்கடுத்
தபொறி, நித்தியமாகியவான்மா நின்சொருபமெ
ன்றவரோ.

(௧௦)

அங்கமுயிரிந்தியநானன்றிவேறெனேக்காணே, னிங்குயான்வேறுண்டே லெனக்கறியப் புகலுமெ ன. (கக)

மெய்யுயிரிந்தி யங்களல்லால் வேறறியேனெ ன்றவனைப், பையவவைவயாலறியப் படானுநீயென் றவரோ. (கஉ)

தேகம்வேறாகிலதைச் சேர்ந்ததிவணேதென வே, சோகமேவினைகருமத் தொடர்ச்சியினாலென்ற வரோ. (கங)

தேகமெடாமுன்கருமச் செயல்வருமாறேதெ னவே, யேகமாமரமும்வித்து மெனுமுறைபோலெ ன்றவரோ. (கச)

காயமுந்தானும்பிறிதேற் கன்மமெவர் செய்த தெனத், தியவுடற்கலதுகன்மச் செயறனக்கேதெ ன்றவரோ. (கரு)

படர்கருமமுடல்செய்யிற் பலமுறுவதார்க்கெ னவே, யடர்பலமுமுடற்கேயா மறிவார்க்கேதென் றவரோ. (கசு)

வெய்யவினையுடற்கென்றான் மெய்யிங்கேவிழு வான்மா, வையமறநரகசொற்க மனுபவிப்ப தே தெனவே. (கஎ)

அனுபவமேயிலையதுவீ ணாரோபிதநிகழ்த்திற் றனுகாணச்செயறனதாய்ச் சார்வதுபோ லென்ற வரோ. (கஅ)

மற்றுடலின்செய்கைதன்மேல் வருமயக்கமே
தெனவே, முற்றுணர்வொன்றில்லாத மோகமென்
றுசொன்னவரோ. (கக)

அறிவுதேகந் தனக்கோ வான்மாவிற்கோவெ
ணவே, பிறிவுசெய்யிலசித்துடலம் பிரமமறிவென்
றவரோ. (உ௦)

தேகமசித்தாகிலிந்தச் செயல்வருவதேதென
வே, யேகபரஞ்சோதியின்முன் னிருக்கையினுலெ
ன்றவரோ. (உக)

இருக்கினுமசேதனத்துக் கிச்செயலுண்டோ
வெனவே, யுருக்குபடாக்காந்தமுன்னி லூசிநிகரெ
ன்றவரோ. (உஉ)

சொன்னசெயலுடற்கானுற் சுகதுக்கமார்க்கெ
னவே, யன்னசுகதுக்கமுந்தா னவ்வுடற்கேயென்
றவரோ. (உ௩)

சேதனமா மான்மாவைச் சேராத துக்கசுக,
மோதுசடமாமுடலை யுற்றிடுமோசொல்லுமென.

பூதமைந்தோடைந்துயிர்கள் புலன்கள்பத்து
மனமுதலுன், கீதிருமெய்யிதின்மனத்துக் கின்பது
ன்பமென்றவரோ. (உரு)

இந்தவிருவகைத்தனுவிற்கேதுவேதெனவினவ
முந்தியகாரணமதனுன் மூன்றுதனுவென்றவரோ.

மனமறியுந்துக்கசுக வரவென்றீ ரம்மனமும்,
வினவிலசே தனமலவோ விரித்தெனக்கு விளம்பு
மென. (உஎ)

அம்மனத்திலான்மா வபேதம்போற்றோன்று தலால், விம்முதுக்க சுகத்தைமன மேவுமென்று சொன்னவரோ. (உஅ)

அந்தமனதுக்கசுக மதனிடத்தினில்லாமல், வந்திலங்குமான்மாவைமருவியதென் சொல்லுமென.

வெய்யகனலின்சூடுமேல் வைத்தசட்டியினூ, டுய்யபுன லூடுவந்தங் கொன்றுதல்போ லென்றவரோ. (௩0)

சித்தாகுமான்மாவுஞ் செடமாகுஞ் சித்தமுந்தா, ஞெத்தாங்கிரண்டுமொன்றா யுற்றவகைசாற்றுமென. (௩க)

வல்லிரும்புகனலுடனே மருவியதுபோன்மனமு, மொல்லையிலான்மாவுடனே யுற்றதுகாணென்றவரோ, (௩உ)

உற்றதேதனுலெனவே யுள்ளமவிவேகமுறப், பற்றியதன்மேலுமதன் பண்புவந்ததென்றவரோ.

அடுத்தகுணம்போமோபின் ஞன்மாவைவிட்டெனவே, யெடுத்தசெம்பூநிறம்படிகத் தேறுதல் போலென்றவரோ. (௩ச)

சுத்தபடிகம்போற் சொரூபமாய்த் தானிருக்க, மெத்தவு மாசாமலினம் மேவியதென் சொல்லுமென. (௩ரு)

அறுதியாம்வாசனையா லடைந்ததாசாமலின, மனோபந்த மிருக்கின்முத்தி வாராதென் றுரைத்த வரோ. (௩௬)

பந்தமெதுமுத்தியெது பகுத்துரைக்க வேண்டுமென்றன், சிந்தைதெளியவென்று திருத்தாளினைவணங்க. (௩௭)

தேகாதிதானெனவே சேரபிமானங்கள்பந்த, மாகாதமானம்விடி லரியமுத்தியென்றவரோ. ()

அபிமானம் வரும்வகையு மாங்கதனைத் தீர்வகையுந், தவியாமலறியத் தயவாகக்கூறுமென. ()

மறந்திடு மஞ்ஞானத்தான் மானம்வந்த தஞ்ஞான, மிறந்துவிடின்மானமும்போ மென்னவுரை செய்தவரோ. (௪0)

அந்தமுறையஞ்ஞான மணுகுவதும்போவதுவுஞ், சந்தயமிலாதறியத் தயவாகக்கூறுமென. ()

அஞ்ஞானம் வந்த தனாதியது சொல்வதல்ல, மெய்ஞ்ஞானத்தாலேவிடுமென் றுரைத்தவரோ. ()

இரவியெதிரடுத்துவந்த விருட்போலவஞ்ஞானம், வரவிதியோசோதிதன்பால் வந்தவகை யேதெனவே. (௪௩)

அந்தவறிவுவந்தா லஞ்ஞான மில்லையப்பாற், சந்ததமுமானந்த சாகரங்காணென்றவரோ. (௪௪)

அனாதியாம்வாசனையா லடைந்ததாசாமலின, மனோபந்த மிருக்கின்முத்தி வாராதென் றுரைத்த வரோ.
(௩௬)

பந்தமெதுமுத்தியெது பகுத்துரைக்க வேண் டுமென்றன், சிந்தைதெளியவென்று திருத்தாளி னைவணங்க.
(௩௭)

தேகாதிதானெனவே சேரபிமானங்கள்பந்த, மாகாதமானம்விடி லரியமுத்தியென்றவரோ. ()

அபிமானம் வரும்வகையு மாங்கதனைத் தீர்வ கையுந், தவியாமனுனறியத் தயவாகக்கூறுமென.()

மறந்திடு மஞ்ஞானத்தான் மானம்வந்த தஞ் ஞான, மிறந்துவிடின்மானமும்போ மென்னவுரை செய்தவரோ.
(௪0)

அந்தமுறையஞ்ஞான மணுகுவதும்போவது வுஞ், சந்தயமிலாதறியத் தயவாகக்கூறுமென. ()

அஞ்ஞானம் வந்த தனாதியது சொல்வதல்ல, மெய்ஞ்ஞானத்தாலேவிடுமென் றுரைத்தவரோ. ()

இரவியெதிரடுத்துவந்த விருட்போலவஞ்ஞா னம், வரவிதியோசோதிதன்பால் வந்தவகை யே தெனவே.
(௪௩)

அந்தவறிவுவந்தா லஞ்ஞான மில்லையப்பாற், சந்ததமுமானந்த சாகரங்காணென்றவரோ. (௪௪)

வேதாந்தத்தாற்குருவான் மெய்ஞ்ஞானம்வந் தவுடன், நீதானா துக்கசுகந் தீராததேதெனவே. ()

பற்றறுமோ துக்கசுகம் பரோட்ச ஞானத்தா லே, யற்றமாமவ்விரண்டு மபரோட்சத் தென்ற வரோ. (௪௬)

பரோட்சமபரோட்சமெது பகுத்துரைக்கவே ண்டுமென்றான், நிரோதமாம் புத்திநன்றாய்த் தெ ளியும்படிக்கெனவே. (௪௭)

பகர்ந்தசத்தஞானம் பரோட்சமனுபவத்தா, லகம்பிரமமெனு ஞானமபரோட்சமென்றவரோ. ()

தான்பிரமமென்றறிந்துந் தனுவைத் தானெ ன்றபுத்தி, யேன்போகவில்லையதை யெனக்கறியப் புகலுமென. (௪௯)

கேழ்வியினான்மனனத்தாற் கிளர்ந்தயோகங்க ளினா, லாழ்பிரமத்தனுபவம்வந் ததுதீருமென்ற வரோ. (௫0)

ஆதியாஞ்சிற்சொருப மாகாததா னினிமேற், சோதிமனாதியினாற்சொருபமாமோவெனவே. ()

எப்போதுஞ்சின்மயந்தா னெனன்மறந்துதே டுவது, செப்புமிடற்றணியிருக்கத் தேடுதல்போ லென்றவரோ. (௫௨)

தேடியபின்றேகபுத்தி தீர்ந்துபோய்ச் சிற்சொ ருபங், கூடுவனோயானென் குறைதீரச் சொல்லு மென. (௫௩)

வந்தவுடல்வேருயும் வாசனையாற்ருனெனலாற், சந்தயமென்றன் சொருபந் தாஞுதற் கென்றவரோ. (ருச)

தனுவைத்தானெனும்பிரமை சத்தஞானத்திலரு, தனுபவமெய்ஞ்ஞானத்தா லறும்வகையேதுரையுமென. (ருரு)

விளக்குவிளக் கெனுமதனுல் வெய்யவிருள் போய்விடுமோ, துளக்கமிலாவிளக்கேற்றிற் ருெலையுமிருளென்றவரோ. (ருசா)

நெடுங்காலமான்மாவை நீங்காதவஞ்ஞானம்,விடுங்காலமெந்நாளோ மெய்ஞ்ஞானத்தாலெனவே.

அந்தகாரங்குகையி லாயிரநாளிருந்தாலுஞ், செந்தீபங்கண்டவுடன் றீர்வதுபோலென்றவரோ.

கருமயோகந்தவமே காரணமாய்நீங்காமலருமையாய் ஞானம்வந்தோ வஞ்ஞானம் போமெனவே. (ருகூ)

குத்துவெட்டும்படைகளிஞற் கூடுமோவிருடுரக்க,வுத்தமமாம்ரவியுதித்தாலோடுமிருளென்றவரோ. (கூO)

அஞ்ஞானவிருடுரக்க வறியாதநல்லகன்ம,மெய்ஞ்ஞாலந்தனைப்பரிக்கும்விதமெவ்வாறெனவினவ.

கருமமிருவகையாங் காமியநிட்காமியமென்,றிருவகையினிட்காம மேதுகாணென்றவரோ. ()

கருமமேகாரணமாய்க்கட்டுரைத்திரிவ்வுலகை,
யொருவும்வகையையெமக்கோதென்றடிபணிய.()

இந்திரசாலம்போலவிவ்வுலகைநம்மிடத்திற்,
றந்திரமாய்த் தோற்றுவித்தோஞ் சத்தியமலவெ
ன்றவரோ. (சு௪)

மித்தையெனுஞ் சகத்துநின்பால் விளங்கு
மோவெனவினவச், சுத்திதனிலேரசிதந் தோன்று
தல்போலென்றவரோ. (சு௫)

அயல்வெள்ளிசுத்தியின்மேலாரோபிதங்கூடு,
மியலுள்ளசகமுமுன்வே றிருந்ததுமுண்டோவெ
னவே. (சுசு)

மனமயக்கம்பிடிக்கிலில்லா வத்துவுந்தோன்றி
டுமதுவோ, கனவில்விண்ணிற்றூன்பறக்கக் கண்ட
துபோலென்றவரோ. (சுஎ)

கனவுபோற்பிரபஞ்சமென்றீர்கண்விழித்தாற்
கனவுபொய்யாம், வினவுசகந்தினமுமெய்யாய் வி
ளங்குவதென்சொல்லுமென. (சுஅ)

மெய்யாகவிளங்குவதுமெய்ஞ்ஞானம்வருமள
வும், பொய்யாம்பின்கனவதுபோற் போதம்வரிலெ
ன்றவரோ. (சுகூ)

முன்புகண்டகனவுபொய்யா முழிசாக்கிரம்
போலவென்றீர், பின்புமுத்தித்திசையடைந்தும்
பிரபஞ்சநிற்பதேதெனவே. (எ0)

தெரிந்தவர்க்குத்தோற்றுவது தெத்தபடம் போல்வதல்லாற், பரந்தசகங்கா்ரியத்திற் பயன்ப டாதென்றவரோ.

(எக)

கன்மவினையஞ்ஞானங் கடந்துமதன்காரியமாம், புன்மையுறுமெய்யுடனேபோகாததேதெனவே.

வெட்டவிழுமரம்பசந்து விளங்குதல்போற்சிலகால, நட்டகன்மமாய்ந்துமங்கநடித்திடுங்காணென்றவரோ.

(எங)

சென்மம்போய்முத்தியினைச் சேரச்சிலரிருக்கத், தொன்மையான்மாப்பலவோ சொரூபம்பகருமென.

(எச)

பிரமமென்றுமீசனென்றும்பெருகுயலசீவனென்று, முறைமயக்கமலதான்மா வொருவனேயென்றவரோ.

(எரு)

ஏகந்தானான்மா வெனும்வகையேமெய்யானால், லாகந்தோறும்பலவா யமர்ந்ததென்றேசொல்லுமென.

(எசா)

பலகடத்திற்சலத்தூடு பானுவிம்பந்தோன்றுதல்போற், றொலைவில்புத்திதொறுமான்மாத் தோன்றுதல்காணென்றவரோ.

(எஎ)

ஆதித்தன்போலான்மா வளவில்புத்திதொறுந்தோன்றிற், சாதிக்குமுத்தியெவர்தனக்கதனைச்சாற்றுமென.

(எஅ)

பந்தமுத்திதானுமந்தப் பரந்தபுத்திதனக்கே
யா, மந்தவிம்பந்தனக்கிலையென் றறிவுவரச்சொன்
னவரோ. (எகூ)

பரமேகமாயுமதிற் பலசீவனேதெனவே,யொ
ருகடலிற்பலகுமிழி யுதிப்பதுபோலென்றவரோ()

சீவனதுதானென்றுஞ் சேரும்பிரமமென்று,
மாவதுவோபேரின்ப மாங்கதெனக்கோதுமென()

ஏகம்பிரம மிரண்டிலைநீவேறுமல, சோகமுறு
ம்பேதமறிற் றேன்றுமின்பமென்றவரோ. (அஉ)

சீவபேதம்போமோசித் தொன்றுமோவென
வே, யாவன்மனமறுஞ்சுழுத்தி யவத்தையிற்பாலெ
ன்றவரோ. (அங)

பேதமலவிவ்வுலகம் பிரமமயமென்றறிந்தும்,
பூதமயமாய்த்தோற்றல் போகாததேதெனவே. ()

கானலைநீரொன்றோடிக் கண்டவர்க்குத்தீர்ந்தபி
ன்னும், வானுலவுநீராகி வயங்குதல்போலென்றவ
ரோ. (அரு)

அறிவானுநல்லறிவு மறியப்படும்பொருளும்,
பிறிவாய்மூன்றாயிருத்தல் பேதமலவோவெனவே.

சொற்பனத்திற்றனித்தொருவன்றோற்றம்வே
றில்லையங்கே, கற்பனையாம்பொருளறிவு காண்பவ
ன்போலென்றவரோ. (அஎ)

கற்பனையாம்பேதங்கள்காணுமற்போம்வகையை,
விற்பனமாய்நானறிய விளம்புமெனவேவணங்க. (

துரியமாம்யோகத்தாற்றூயமனம்லயமாகு,ெ
ரியமூவகைவிகற்ப மழியுமென்றுசொன்னவரோ.(
சிறந்திருக்குமான்மாவுஞ் செகமெல்லாநிறை
ந்திருந்து, மறைந்தெனக்குத்தோன்றாத வகையே
துசொல்லுமென.

(கூ0)

சத்துச்சித்தானந்தந் தான்மூன்றுமதனுட
னே, யொத்துற்றுநாமவுருவஞ்சகமாகி. (கூக

இருக்கையினிற்றோன்றுதிதுமூன்றும்பிரமமெ
ன, மரிக்கில்வரும்பின்னிரண்டு மறிசகமென்றுரை
த்தவரோ.

(கூஉ)

அறிந்துகொள்ஞானத்தாலே யான்மாவையெ
ன்றுரைத்தீர், சிறந்தொளிருமான்மாவுந் திரியமா
மோவெனவே.

(கூங)

முந்தியஞானத்தாலே முதிருமஞ்ஞானந்துற
க்கிற், சிந்தையிலான்மாச்சுயமாய்த் திகழுமென்
றுசொன்னவரோ.

(கூச)

இனியமுத்திச்சுகமிருப்ப தெப்படியென்றேவி
னவ, வனுபவத்திலறிவிடையா னந்தம்போலென்
றவரோ.

(கூரு)

மனலயம்வந்தவரல்துமற்றிலரோமுத்தரென
ச், சனகனைப்போற்சீவன்முத்தர் தாமுமுளரென்ற
வரோ.

(கூசு)

சீவன்முத்தியடைந்தோர்கள் செயலுமவர்தங்
குணமும், நாவுரைக்கும்வாசகமும் நானறியச்சொ
ல்லுமென.

(கூஎ)

வருங்கருவு பிறப்பினொடு வளர்தல்பருத்தல்கு
றைதல், லொருங்கலுமெய்க்கென்றதனை யொறுத்தி
ருப்பானென்றவரோ. (கூஅ)

பார்ப்பதினுங்கேட்பதினும் பகர்வதினுஞ்செ
ல்வதினு, மேற்பதினுங்கரண தன்ம மெனத்தவிர்ந்
தானென்றவரோ. (கூகூ)

பசிதாகமுயிர்க்கெனவே பயந்துக்கஞ்சுகங்கா
மம், வசிகோபமதிக்கெனவே மகிழ்ந்திருப்பானென்
றவரோ. (க00)

வீடுந்தாரமுமுறவு மேவியென்றுமிருந்தாலு,
நீடுந்தாமரையிலைநீர் நிகரொப்பானென்றவரோ. ()

பற்றிடுங்காயமுந்தானும் பன்னுளொன்றாயி
னும்பி, னுற்றபுளியம்பழமுமோடு மொப்பானென்
றவரோ. (க0உ)

கூறுமுலகியற்கையுடன் கூடினுமெய்ஞ்ஞான
ம்வந்தோர், சேறும்பிள்ளைப்பூச்சியும்போற்றிரிவா
ர்காணென்றவரோ. (க0ஙு)

ததியூடுகடைந்தவெண்ணெய் தான்மோரிற்கி
டப்பதுபோல், மதியோடுகூடினும்பின் மயங்கார்
காணென்றவரோ. (க0சு)

அருச்சுனன்றன்பொருட்டாக வனைவருக்கும்
ஞானம்வரப், பொருந்தியதேசிகவடிவாம் புண்ணி
யரோகண்வளரீர். (க0ரு)

ஆயர்குலமாதரவளிலோரைப்புணர்ந்துந், தூ
யபதிஞூருயிரவருடந் தோய்ந்திருந்தும். (க0கூ)

பரமமுனிவர்முன்னே பரிச்சித்தைக்கீண்டிய
ன்று, பிரமசரியஞ்செலுத்தும் பேரொளியே கண்
வளரீர்.

(க0எ)

வெண்பா.

ஆதிமூலம்விசயற் காதிமறையின்பொருளை,
யோதியுணர்த்துகின்றவுண்மையினைக்-காதலுற்று
க், கற்றோருங்கேட்டோருங்காசினியில்வாழ்ந்துமு
த்தி, பெற்றோர்கண் முத்தர்வழிப் பேறு. (க0அ)

கீதாசாரத்தாலாட்டுப்பிரபந்தம்

முற்றுப்பெற்றது.

ஸ்ரீகிருஷ்ணசகாயம்.

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ-தத்துவராயசுவாமிகள் அருளிச்செய்த

சசிவர்ணபோதம்

இஃது

சமிவனக்ஷேத்திரமென்னுங்கோயிலூர்

ஸ்ரீ-முத்துராமலிங்க சுவாமிகளின்

ஆதீனத்திற்குரிய

ஸ்ரீ-சிதம்பரசுவாமிகள்

மாணாக்கர்களிலொருவராகிய

அ - இராமசுவாமிகளால்

கோயிலூர் ஏட்டுப்பிரதிப்படி

பரிசோதித்து

சென்னை:

மிமோரியல் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

விய௵ சித்திரைமீ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

விருத்தாசலபுராணத்திலுள்ள

சசிவர்ணன் சரித்திரம்.

நாரணன் றன்னைநோக்கி நம்பர்தா மருளிச்செய்வார், சீரணிதவத்திஞேர்கள் சேவையின் பெருமைகேளீ, ரோணிபாவவெச்ச னென்ஞெருமறையோன்மைந்தன், ருரணிதன்னிற்பாவி சசிவர்ணனென்பான்மன்ஞே. (க)

பத்தரையும்மையெம்மைப் பரவுவேதத்தைநீற்றை, மெய்த்தருமத்தைநிந்தை விளம்புவதவன்றன்கல்வி, நித்தலுங்களவுசெய்து நியமந்தன்னடுத்தார்தம்மைக், குத்திரஞ்செய்தருனே குலாசாரமாவதம்மா (உ)

மாதரைக்கிளைஞர்தம்மை வாலரைக் கருவைக்கோவை, வேதியர்தம்மைக்கொல்லும் விரதமேவிரதநல்ல, நீதிகளுடையோர்வீட்டி னெருப்பிட்டும் விடங்களிட்டும், பாதகப்பொடிகடூவிப் பறிப்பதேயவன்றன்கேள்வி. (௩)

பத்திரமெழுதியேவற் பணியினர்போலச்சென்று, குத்திரஞ்செய்துகோளுங் குறளையுமுரைத்

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

விருத்தாசலபுராணத்திலுள்ள

சசிவர்ணன் சரித்திரம்.

நாரணன் றன்னைநோக்கி நம்பர்தா மருளிச்செய்வார், சீரணிதவத்திஞேர்கள் சேவையின் பெருமைகேளீ, ரோணிபாவவெச்ச னென்றெருமறையோன்மைந்தன், ரூரணிதன்னிற்பாவி சசிவர்ணனென்பான்மன்னே. (க)

பத்தரையும்மையெம்மைப் பரவுவேதத்தைநீற்றை, மெய்த்தருமத்தைநிந்தை விளம்புவதவன்றன்கல்வி, நித்தலுங்களவுசெய்து நியமந்தன்னடுத்தார்தம்மைக், குத்திரஞ்செய்தரூனே குலாசாரமாவதம்மா (உ)

மாதரைக்கிளைஞர்தம்மை வாலரைக் கருவைக்கோவை, வேதியர்தம்மைக்கொல்லும் விரதமேவிரதநல்ல, நீதிகளுடையோர்வீட்டி னெருப்பிட்டும் விடங்களிட்டும், பாதகப்பொடிகடூவிப் பறிப்பதேயவன்றன்கேள்வி. (ங)

பத்திரமெழுதியேவற் பணியினர்போலச்சென்று, குத்திரஞ்செய்துகோளுங் குறளையுமுரைத்

துமுன்னே, மித்திரர்போலப்பேசி விருந்துண்டுகள
வுகொண்டு, சத்துருவாகப்பேசித் தனிப்பழிதொகி
ன்றான்.

(ச)

நிறைத்தபொய்யோலைகாட்டி நிலங்களுந் தன
முங்கொண்டு, மறைத்தவவேடங்கொண்டு வழிக்
கனைவந்தியிட்டுப், பறைச்சியைமனைவியாக்கிப் பா
தகரிணக்கஞ்செய்து, மிறைச்சியுமீறுங்கள்ளு மீய
லுமருந்தாநின்றான்.

(ரு)

சுரர்களாயிவன்றன் வர்க்கஞ் சுவர்க்கத்தைய
டைந்தோரெல்லாந், தாமிலாநரகில்வீழ்ந்தார் சசி
வர்ணன்செய்தபாவ, முரண்முயலகனும்பேயுநோ
யுமாய்மொய்த்துவீழ்ந்தா, னரகமும்வருவனென்
றுநடுங்கிடத் தொடங்கிற்றம்மா.

(சா)

வெறுத்திடவொருவன்செய்தபாவங்கண்மிக்க
ஞான்று, பொறுக்குமோதெய்வமிம்மை தன்னிலே
புடைத்துப்பின்னர், மறுத்திடாநரகில்வாட்டும் பு
ண்ணியமலிந்தஞான்று, நிறுத்துமோவிம்மைகாட்
டு நெருப்புநீர்மிகுதிபோல.

(எ)

சசிவர்ணன்றந்தையாருந் தனையிடைப் பணி
ந்துபோற்றி, யிசையுளதேவபத்த ரொன்னுமாதவ
னைநோக்கி, விசையுளமைந்தன்செய்த வினையெலா
ம்விளங்கச்சொன்னார், கசிவுளதேவபத்தர் கருணை
யாலுபதேசிப்பார்.

(அ)

அழுங்கியபாவவெச்ச வருண்முதுகுன்றன்மு த்தி, வழங்குவான் வைத்தநந்தி வரையுநாற்காத வெல்லை, செழுந்திருமலையாள்பூசை செய்தசத்திசு ரத்துக், கொழுந்துபட்டயஞர்பூசை கொடுத்தபின் சிருட்டிபெற்ருர். (கூ)

பூருவ மகவான்பூசை புரிந்து வானரசஞ, னேருறுமிந்திராணி பூசையாலவனைச் சேர்ந்தாள், தாருகாசுரன்பூசித்துத் தானவர்க்கரசஞ, ஞரு றுவெள்ளிபூசித் தவர்புரோகிதருமாஞர். (க0)

உருவசிபூசையாலே யுயர்மகவானைச்சேர்ந்தா, ணிருமலநந்திவெற்பி னீயுநின்மகனும்போகித், த ருமதானங்கள்செய்து சத்திநாதனையும் போற்றிப், பருவரைதனின் மாநந்தி பராயண ரிருப்பார் கே ண்மோ. (கக)

அந்தமாயோகிதன்னை யாருதசேவைபண்ணி ன், மைந்தஞேயகலுமென்ருர் மறைமுனிவாக்கை நம்பி, யிந்தமால்வரையினண்ணி யீசானகங்கையா டித், தந்தையுமகனுஞ்சத்தித் தலைவனைப்பணிந்து போற்றி. (கஉ)

பரமதேசிகாநந்தி பராயணர்தம்மைப்போற் றி, யுரமுறப்பணிந்துசேவை யுற்றபின்மைந்தன் செய்த, காவுடைப்பவங்கள்சொன்ஞன் கடைக்க

ஞானயோகிநோக்க, விரவுபாதகங்களெல்லா மேவி டாதகன்றதன்றே.

(கங)

யோகிதன்பூசைக்கேற்ற வுபகரணங்கள் செயதும், போகமார்பசுக்கண்மேய்த்தும் பொற்பதம்பி டித்துநிற்ப, வேகியபவங்களீங்கி வியாதியுநோயு ம்பேயு, மேகியதுடனேபின்னர்ப் பரிகலச்சேடமீ ந்தார்.

(கச)

பரிகலச்சேடங்கொண்டு பதத்தினிற்பூசைசெ ய்தா, னரியநீறியோகிசாத்தி யடியிணைத்தலைமேல் வைத்துத், தெரிவுறவுபதேசித்தார் திவ்வியஞான ம்பெற்றுத், தரிவுளமுத்திபெற்றான் றந்தையுமுத் திபெற்றான்.

(கரு)

பிதிர்க்களுநரகம்விட்டுப் பெருஞ்சிவலோக ஞ்சேர்ந்தார், கதிர்ச்சசிவர்ணர்காதற் புலைச்சியுங்க தியிற்சேர்ந்தாள், மதித்திருமாலேகேளீர் மாதவர் பெருமைதன்னைத், துதிக்கரிதின்னஞ் சொல்வோ ஞ்சுவகையென்றுருத்திவேசி.

(கசு)

சசிவர்ணன்சரித்திரம்

முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

சசிவர்ணபோதம்.

மோகவதைப்பரணியிலுள்ள

கடவுள்வணக்கம்.

மதிபரிதியெரிநீர்கால் வானவனியியமானன்வ
டிவாயெல்லா, வதிபதியாயனைத்துமா யல்லாதவறி
வுருவை யகத்துள்வைப்பாம். (க)

சொல்லாற்றம்மதிவிரகாற் றூயதிதுநீயதிது
வென்னுமாக்க,ளெல்லார்க்குமதுவதுவாயிறையிரு
க்கும்படியேயா யிருக்கவென்றே. (உ)

கடவுள்வணக்கம்முற்றிற்று.

ஷை பரணியில் பேயிரங்கலதிகாரத்

தொடர்புபாடல்.

முடிவுமாதியுமற்றமுழுமுதல்
வடிவமாகிவரும்படியெங்ஙனே. (க)

சொல்லுகோலஞ் சுருதிவிருத்தமோ
வல்லவோவென வன்னையருளுமே. (உ)

அருவனாயினு மன்பர்க்குருவனாய்
வருவனென்பது மாமறைசொல்லுமே. (௩)

பத்தியாம்வலையிற்படும் பார்மிசை
புத்தியாலறியொண்ணுப் புராணனே.
தேவியிப்படிக்கூறத் திருவருள்
பாவியேற்கிலதென்றுபதைக்கவே. (ச)
(ரு)

தொடர்புபாடல் முற்றிற்று.

நூல்.

அலகையச்சமறவகவான்களு
முலகின்முத்திபெறும்பரிசோதுவாம்.
புணர்ந்தபாவமெலாம்பரிபூரண
முணர்ந்தஞானிவிழிபடவோடுமே. (க)
(உ)

வேறு.

எழிலாருஞானிபுகழென்னைகூறவுயர்வீடிவன்
சொல்வழிசெய், தொழிலாளர்சேர்கையதுகேளு
முன்னையிதிகாசமொன்றுசொலவே. (ங)

தந்தாபமற்றபரனேவல்செய்த வவனுற்றபே
றுதனைமுன், செந்தாமரைக்கண்முதல்வற்கெம்ம
ண்ண திருவாய்மலர்ந்ததிதுவே. (ச)

உவமிப்பின்ஞானிவிழிபட்டுமுன்னை வினைவிட்
டுமுத்தியுலகிற், றவமற்றவெய்யவினையேபுரிந்த ச
சிவர்ணனெய்துகதையே. (ரு)

வேறு.

எமம்புகுவாருளபாதகா-மியாவர்க்குளுமிக்க
வனுகுமிவ, னமம்புகல்வார்குலமும்மெரிவாய்-நர
கம்புகுமாறுநடந்தனனே. (சு)

மலமேவியதீவினையின் வலியான்-மகிழும்பர்பத
த்திலிருந்தவிவன், குலமேவியதென்புலவாணர்களு
ங்-கொடிதாய்நரகங்குடியேறினரோ. (எ)

மிகமேவியபுண்ணியபாவமெனும் - வினையின்
பயன்மேலொருகாலமுறூ, திகமேவருமென்பதனு
னுளநோ-யெல்லாமிவனைச்செறவெய்தினவே.(அ)

தன்புத்திரனையம்விடாமையினும்- றவுறுற்ற
விவற்பெறுதந்தையுளந், துன்புற்றினியென்னை
கொலோபுதல்வன் - றுயர்தீர்வகையென்றுசுழன்ற
னனே. (கூ)

ஒன்றாலும்வினைத்துயர்துய்ப்பதலா-லொழிவி
க்குமுபாயமுனக்கிலதே, யென்றாலுமறிந்தவனன்
புவிடா-திவனைக்கொடுசென்றனனெங்கணுமே. ()

ஒருமாதவன்மற்றிவன்வேதனைகண்-டொழிவ
ற்றுளவொன்றையுளத்துணரும், பரமாகியஞானி
கள்கண்ணுறலே-பரமாவிழ்தமென்றுபகர்ந்தனனே

தானந்தமிலாததனைத்தருவான்- சத்தீச்சுரமெ
ன்னுமிடந்தனில்வாழ், மானந்திபராயணனென்பவர்
தின்-மைந்தர்க்குறுநோய்க்குமருந்தெனவே.(கஉ)

முடியாவுபதேசமிதென்றவனு - முனிவன்பத
மெய்திமொழிந்தனனிக், கொடியான்வெருவாதுகு
யிற்றியநோய்-கூறற்கரிதாயகொடுந்தொழிலே. ()

ஈங்குன்றிருமுன்பகரும்படியோ-விவனெய்
யதீவினையென்னவெலாம், நீங்கும்படிதன்னனுபூ
யிஞ-னிகழும்விழிவைத்தனனின்மலனே. (கச

கணியாதபவக் கடுவானதிருக்-கண்வைத்த
ம்விட்டனகாதுகடும், பிணியானையு நல்லபிதா
றைதாள்-பேணிப்பணியென்றுபெயர்ந்தனனே.(

இடனேமுதலாகவுவந்திறையோ - னேவும்ப
ணிசெய்திவனுஞ்சிலநா, ளுடனேயிவனே திருபே
னிதனக்-குரியானெனவுற்றனனும்பரொடே.(கசு

நன்றாய்முனிதாள் வழிபாடதனு - ளுவித்
மானபிறப்பினைவிட், டொன்றாகியவீடுண ருத்தம
ர்கட்-குளசாதனநான்குமுதித்தனவே. (கஎ)

முனிவன்றிருமுன்புளதன்குறைதான்-*மொ
ழிவான்சிலவஞ்சலிகுஞ்சியதாய்ப், பனிவந்திருகண்
கள்பதங்களிலே-பலகால்வலம்வந்துபணிந்தனனே

அருளேவடிவா கியமாமுனிதா- னறியாதவர்
போலவழுங்கலுறும், பொருளேதெனமைந்தனடுங்
கினனிப்-பொல்லாதபவப்புணரிக்கெனவே. (ககூ)

வெருவும்பிறவிக்கடல்வித்தாமுன்- வேதாகம
கிதைவிளம்புமதைக், குருவுந்தனதன் பன்மனத்த
ளவிற்-கொளுமாறுதொகுத்திதுகூறிடுமே. (உ0)

* மொழிவான் - என்றதற்குப் பொருள் - மொழியும்
பொருட்டு என்று கொள்க.

வேறு.

மரணபவங்களான புனலையுடையது- மதியை விழுங்குகாம வரவுபெரியது, கரணவொழுங்கறுத விடையவினைநுகர்-கணமொடியங்குமீனமிகவுமுக ள்வதே. (உக)

பெருமிதமென்றுகூறும் பெருமையுடையது- பிணிகளெனுங்கெடாத புலவுகமழ்வது, வருமிட ரின்பமான திரைகள்பொருவது- மனமெனும்வஞ்ச ராஜமகரமுறைவதே. (உஉ)

அளவிலகந்தையாமை யபரிமிதமுள-தவாவு நிறைந்தவாழமறியவரியது, களவுநெருங்கு பாரும லையுமுடையது-கலகவிடங்கண்மேவு கிருமிநெளி வதே. (உ௩)

துகளெனுநன்கிலாதநுரைகடருவது-துறவியி னின்பமானகரையைவிடவகன், மகளிரொனுந்தவா தவலியசுழியது-மறலியுமஞ்சுகோப வடவையெரி வதே. (உச)

வெருவருகின்றபோகமுதலையுடையது-விவிதம னந்தமானதுறையுமறிபவ,ரொருவர்கடந்துபோக விரகிலெழுபவ- வுததி விளம்பயாவருலகிலறிஞரோ.

பொறிவழிசென்று மீளுமவலமதிகொடு-பொ ருசமயங்களாறுமறியவிழுமதி,லறிவழிவொன்றிலா தபொருளதெனவுள- வனுபவவங்கமேறுமறிஞரக ல்வரோ. (உ௬)

புணரிகடந்துபோகவிரகிலெனமொழி-பொழுதுபுலம்பியாவிபுதல்வனிறுமுன, முணர்வெனும்வங்கமேறுமறிஞரகல்வரொன் - றுரையைவழங்கிநாதனுவகையருளவே. (உஎ)

வேறு.

வாழியெனவிறைவனடி தொழுதுவருபவமா, மாழியினையகலுமறிவருளுகெனவவரே. (உஅ)

பரவறிவுமபரவறிவென்வுமிருபரிசாந், திரவறிவையறியுமவர்மொழிவர்தெளிவுறவே. (உகூ)

அபரவுணர்வருமறைகண் முதலகிலகலையு, முபரமதறவுதவுமுணர்வுபரவுணர்வே. (௩0)

ஆகமவிதங்களறிவாரபரமறிவார், யோகமொடுறங்குமவரோபரமுணர்ந்தார். (௩க)

புராணமிதிகாசமெவையும்பொருளனைத்தின், பிராணனறியாதுளவிடத்திவைபிதற்றே. (௩உ)

இயலறிவதிசையறிவ தினமறிலதுளதா, மயலறிவதறிவதலவறிவறிவதறிவே. (௩௩)

நவிலுகலையறுபத்துநாலுமறிவாரும், பவலயமதறுசுத்தபரமமறியாரோ. (௩ச)

ஆகவறிவாளரறி வாரிவையனைத்து, மேகவறிவாளரிவையாவுமறியாரே. (௩ரு)

ஐயறிவறிந்தவை யடங்கினவரேனும், மெய்யறிவிலாதவர்கள்வீடதுபெறாரே. (௩சா)

மெய்மையறிவல்லதமில் வேறறிவதெல்லாந்,
தம்மையறியுமறிவதேயறிவுதானே. (௩௭)

பூசனையுமதுசகலபொருளுமறிதமையு, மீசனை
யும்வேறதறவறிவதறிவெனவே. (௩௮)

தானெனுமுடம்பது தனைத்தவிரவேறு, யா
னெனுமருத்தமுளவோவருளுகெனவே. (௩௯)

வேறு.

எனதாடைபொன்பூமகன்றையல் பாய்மா-வி
பங்கண்முகங்கால்கை மெய்யென்னவென்றுந், தன
தாயுரைப்பான் வகுத்திந்தவூனைத்-தானென்றயர்த்
துஞ்சொலத்தக்கதன்றே. (௪0)

தாளாகவூராழியார்வென்னில்வீணை-தண்டாக
வன்மார்புதட்டாகமொட்டாம், நாளாமலர்ச்சென்
னிகூந்தற்கொடித்தேர்-நாணுளுமூர்வானில் வேறு
காடே. (௪௧)

கடக்குஞ்சரம்பண்ணியுண்ணின்றொருத்தன்-
கைபாதகன்னங்கண் மெய்போலியக்குங், கிடக்கும்
நடத்தாவிடத்திவ்வுடம்புங்-கிடக்கும்மொருத்தன்
னடத்தாவிடத்தே. (௪௨)

ஒருகூறுமலமாகுமொருகூறுடம்பாகு-மொரு
கூறுமனமாகுமுண்டற்றவன்ன, மிருகூறுநீயாகி
லொருகூறுநீயா - மிழிக்கும்மலஞ்சோரிடப்பட்ட
துடலே. (௪௩)

இளராதரத்துண் ணுமன்னஞ்சுடக்கை- கிட்டப் பொருதேயிருந்தார்முனிந்தார், தளராதுறுப்பொன்றுமுயிர்போகவன்றே - தழற்பள்ளிமீதே துயின்ருர்சகித்தே. (சச)

நிழற்பாவைகண்ணுடியிற்பாவைகைகா-னிமிர்க்கும்முடக்கும்மிவன்செய்தவெல்லாந், தொழிற்பாலவாமற்றிவ்வுடலஞ்செய்தொழிலுஞ்-சுடர்ஞானவடிவானவன்செய்ததொழிலே. (சரு)

அறிகின்றபொருளென்று மறிவானில்வேறே-யாருவிவ்வுருகநானென்னலாமோ, செறிகின்றபுள்ளல்லவேகூடிவ்வகையே-செடமானவுடனின்னில்வேறென்றுதெளியே. (சசு)

நிலமாகும்வர்க்கென்றணெகிழ்கின்றநீரா - நெருப்பாமிதிற்சுட்டவெல்லாமுமநிலஞ், சலமானபுரையானவானிந்தவுடலஞ்- சடமானவைம்பூதவுருவங்சடாமே. (சஎ)

விழியைப்புமானென்னில்ரவியாதியாலே-விளங்கின்றதல்லால்விளங்காமையாலே, யொழியப்படுங்கன்னமுதனுமுன்ற - னுருக்கண்டகண்டன்னையொப்பாகவுன்னே. (சஅ)

வேறு.

அழனுண்பொருள்களிலுண்பவைமுக்கூறதின்முதற்கூ- றணியென்புநடுக்கூறதுமச்சைக்கணியாகு, மெழில்கொண்டகடைக்கூறதுவாக்காயெழுமென்றே-யியனூன்மறையந்தங்களிசைக்கின்றனதாமே

உண்ணும்புனன் முக்கூறதின் முதற்கூறுவர்நீ
ரா- முதிரம்நடுவிற்கூறு கடைக்கூறுபிராண, னெ
ண்ணுமிதிலிருகூறவை நீயாயிடினன்றே- விறுகின்
றபிராணன்னது நீயாகுவையிசையே. (௫0)

பிராணனுமல்லதுஞ்சிலுணர்வின்மையாலஃது
ணரும்புலன்களொழிவாற், பிராணனதென்னின்ம
ன்னையொழியாதுசேனை நகர்சூழ்வலஞ்செய்பொழு
தே. (௫௧)

கரணமொடுங்கவாயுநிகழ்வென்கொலென்னி
லுடல்காவலாகுமலதேன், மரணமடைந்ததென்
றுதமர்சுட்டிடாமுன்வலைவாலின்ஞாளிகொளுமே.

இனமுறவெண்ணவுள்ள கரணத்திலொன்றி
தெனலாலிதென்னதெனலான், மனமுனமன்னமெ
ன்றவதனுலுமல்லமதியல்லவந்தவகையே. (௫௩)

இடரின்புளதாய்நிலையற்றறிவற்றெண்ணுங்க
ரணங்களிலாயெவரு, மடரும்பிறவிக்கடியென்று
ணரு மகங்காரமுநீபலவென்றறியே. (௫௪)

ஐயப்படலோர்பொருணிச்சயமா யறியப்பட
ல்யானெனதென்றுமதஞ், செய்யப்படல்செய்வது
சிந்தனையாஞ்சித்தமதுவன்றெனநீதெளியே (௫௫)

முன்னுகவுடம்பதுசித்தமதே முடிவாகமொ
ழிந்தபொருட்டிரடா, வின்னுகிலநீயறியும்பொரு
ளாய்நிகழ்கின்றதனுலெனநின்மலனே. (௫௬)

உன்னாலறியப்படுமியாவையுமுன்னுருவன்றெனவேவோதினையொக்குமெனக், கென்னாலறியாதொழியும்பொருளோயாருகுவதென்றனனென்றனுமே.

அறியாப்பொருள்காரணமாயைகுறித். தறியும்பொருள்காரியமாமுலகிந், நெறியாற்றிகழ்நான்மறையந்தமெலாம். நீயன்றெனவோதுநிரந்தரமே()

அறியும்பொருளன்றறியாப்பொருளன். றறிவாகியநீயெனுமப்பொருடான், பொறியின்வழிநின்றறியும்பொருளோ. போதக்கண்விழித்தறியும்பொருளே.

(௫௯)

வேதப்பொருடானிதுவேறுசொலும். வினையாவையுமன்றெருவேறுமிலாப், போதப்பொருளந்தமறைக்கணியாம். புனிதப்பொருடத்வமசிப்பொருளே.

(௬0)

வேறு.

நிமலமாம்பரமதுவெனும் பொருணீயெனும்பொருள்சீவனே, யமலமானவிரண்டயிக்கியமசிபதப்பொருளாவதே.

(௬௧)

அருமையாகியபிரமமுன்னிலை யாகுமாருயிர்பின்னிலை, யிருமையாயவிரண்டயிக்கியமெய்துமாறெவனென்னவே,

(௬௨)

உபாதியால்வரு பேதமேயிவர் பேதமன்றுருவுயிரின், கபாதியாமுடல் போலிறைக்குளகாரணாதிகள்காயமே.

(௬௩)

ஈசன்முற்றறிவான்வியாபியெவைக்குமேதுவி யம்புமா, காசகன்னிருபாதியாவனே காரணாதிகளா வதே. (கூச)

நீதியாலிருபாதிநீக்கிட நீயெனச்சொல்பதத்தி னு, மாதியாகிய தத்பதத்தும சுத்தசுத்தமு ரைத் துமே. (கூரு)

ஆகமுன்றிக ழேழுநானெனல் த்வம்பதத்தில சுத்தமே, சோகமின்றியசாட்சிநானெனல் த்வம்ப தப்பொருள்சுத்தமே. (கூசு)

அகிலகாரணமாதிநானெனல் தற்பதத்திலசுத் தமே, சகலகாரணசாட்சிநானெனல் தற்பதப்பொ ருள்சுத்தமே. (கூஎ)

செறிந்தகாரணகாரியங்கள் சிதைந்துமேலுற சித்ததா, யறிந்தவாதனேதானுமற்றதவ் வசிபதப் பொருளாவதே. (கூஅ)

அசுத்தமாகிய திருபதத்தினு முக்கியப்பொரு ளாவதே, விசுத்தமானதிலக்கியப்பொரு ளென்று சொல்லுவர்விமலரே. (கூகூ)

முரண்டசீவ பரங்கடம்முடன் முக்கியப்பொ ருளாவதே, யிரண்டில்வேறறுசிற்சொரூப மிலக்கி யப்பொருளாவதே. (எ0)

ஊக்கியப்பரசீவர்தங்க ளுடம்பிரண்டு மிலக்க ண, வாக்கியப்படி நீக்கினலொரு வஸ்துவேபரவ ஸ்துவே. (எக)

ஓரில்விட்டதும் விட்டிடாததுமுபயமும்மெ
னவுணர்வுளோர், தேரிலக்கணைதிரிவிதத்திலிசைப்
பர்மற்றதியம்புவாம்.
(எஉ)

மஞ்சுகூப்பிடுமென்றல்போலவும் வடபகிரதி
யுள்ளதே, விஞ்சுகோஷமதென்றல்போலவும் விட்
டலக்கணையாவதே.
(எங)

சிவலைநின்றது வெள்ளைபோயின தென்றுசெப்
புதல்போலவே, கவலையன்றிவிடாதலக்கணையென்
றுநீகொள்கருத்திலே.
(எச)

மேவும்விட்டுவிடாதலக்கணை மெய்மையாதெ
ணிலந்தவித், தேவதத்தனெனும் பொருட்படிசிந்
தைசெய்திடுதீரவே.
(எரு)

விட்டலக்கணைதனையும்விட்டு விடாதலக்கணை
தனையும்நீ, விட்டுவிட்டுவிடாதலக்கணை யால்விளங்
குவிளங்கவே.
(எசு)

போதுமேவிய தேசம்விட்டொரு புருடனைக்
கொளுமாறுபோ, லோதுமீருடல்கண்டுவிட்டதனு
ண்மைகாணவுணர்ந்திடே.
(எஎ)

வேறு.

பிரியாவுயிர்காரியமாமுடலும் பிரமத்துறுகா
ரணமாமுடலுங், கரியாகியவாதனையுங்கழியக்காட்
டும்படிகண்டுகொள்கண்ணுறவே.
(எஅ)

கரணத்திரணிற்பினுமப்பொருளைக் காணக்கி
டையாதவைகையறவே, மரணப்படினும்மதுகண்
டுகொளும்வழியில்லையெனும்படிநீமதியே. (எசு)

எந்தக்கரணங்களுமேவனவிதில்வாதனையா
ல்விடயங்களொடே, வந்தக்கரணங்கள்பொருந்தல்
சுனவைமாய்தல்சுழுத்தியவத்தையதே. (அ௦)

வேறு.

வினவிற்பரத்தையறிவுறுத்றகவத்தைபுலன்வி
னைமாறியே, நனவிற்சுழுத்திநிலைவரினப்பொருட்டி
கழுநலமாகவே. (அக)

திவிதத்தவத்தைகளையறிவுற்றவத்துரியநிலைசி
வனே, யிவிதத்திலப்புருடனனவுற்றவத்துரியநிலை
யீசனே. (அஉ)

அகிலக்கரிப்பரமதுரியப்பொருட்டுரியமதுவா
கையே, புகலுற்றதத்வமசியெனுமுப்பதத்தின்முடி
பொருளாவதே. (அங)

நிமலப்பொருட்சுருதிநெறியிற்பெறக்கருணைநி
திகூறவே, யமலப்பொருட்பெறுதலருமைத்தென
க்கழறியடிவீழவே. (அச)

தமரக்கலைக்களவுதெரிவற்றதற்பொருள்கட
னையிகுவா, னமரர்க்களப்பரியபத நற்புனற்கொடு
செய்தபிடேகமே. (அரு)

பவளத்தில்வைத்தவமிர்தினின்மிச்சிலிட்டினியபரிவோடுமா, தவளப்பொடிக்க வசமெனவிட்டுடற்பகைகடலைசாயவே. (அகூ)

உதகத்துடற்பொருளொ டுயிர்கைக்கொடுச்சிமிசையொருபோதொடே,பதகத்தலத்தைவிடவிருகைத்தலத்தொடிருபதமேவியே. (அஎ)

ஒழியப்புலக்கணுபநிடதப்பொருட்டெரியவுளஞானமாம், விழியைக்கொடுத்துமொழி யெனமுப்பதப்பொருளும்வெளியாகவே. (அஅ)

நனைவைத்துவக்கிமுடிதுரியத்தைமுற்றவிறைநவினீதியே, மனவர்க்கமற்றவனுபவமுற்றசிற்ககனவலியோதுமே. (அகூ)

வேறு.

புரணமாகவேபுறம்புளபுலன்களுமந்தக், கரணமியாவையும்வழங்கிடம்நனவெனக்கண்டேன்.

புரணமாகியபுறம்புளபுலன்களுமந்தக், கரணமியாவையும்வழங்கிடங்கனவெனக்கண்டேன். ()

மரணமாகியதிசையிதுவெனும்படிமறுதி
கரணமியாவையுமிறந்துளசுழுத்தியுங்கண்டேன். ()

எஞ்சலின்றியெக்கரணமுமிறந்திருண்டிருந்த
துஞ்சலங்குணர்போதமாந்துரியமுங்கண்டேன். ()

துரியமாகியபோதமோர்துளக்கமற்றனைத்தின்
கரியதாயிருந்திடம்பரனனவெனக்கண்டேன். ()

புணர்ந்தவிச்சகத்தொழித்துணர்போதமாந்த
னையே, வுணர்ந்தமற்றதுபரன்கலையெனும்படியுண
ர்ந்தேன். (கரு)

சான்றுசாக்கிய மிறந்திடத்தானிருந் தமையு
ந், தோன்றுறுவிடம்பரன்சுழுத்தியதெனத்துணி ந்
தேன். (கசா)

மரித்ததென்றுணர்ந்துரைத்ததும்மரித்திடந்த
னிலே, தெரித்தபோதமேததுபரன் றுரியமாய்த்தெ
ளிந்தேன். (கஎ)

இறையெனும்பொருட்டுரியமேயென்னையாண்
டவனே, மறையினந்தநற்பதப்பொருணனவெனம
தித்தேன். (கஅ)

பண்டைவிச்சுவவாதனைப்பழுதுபோய்முழுதுங்
கண்டகண்ணதேயாகியகனவதுங்கண்டேன். ()

காட்சியானவையுங்கண்ணதாயக்கணுங்கரைந்த
மாட்சியாகியவகோசரமுறக்கமாய்மதித்தேன். ()

அருந்தவாமறையந்தமாமகோசரந்தனினீ
யிருந்தவாறறிவித்தவாறெங்ஙனமிசைப்பேன். ()

எம்பிரானிடந்தொறுமிடந்தொறுமதுவதுவாய்த்
தம்பிரானடஞ்செயும்வகைசாற்றுமாறறியேன். ()

ஆவியேயடியேன்செய்கைம்மாறுனக்கென்னெ
னிற், பாவியேனதுதானுமுன்னுடையதாம்பண்
டே. (கoக)

ஆவல்செய்தெனதாக்கையுள்ளளவுநின்னடியார்க்
கேவல்செய்வதேயன்றிமற்றொன்றுநானறியேன்.()
இறவிலெலப்பதமும்பெறவேண்டிலேனென்றும்
பிறவிவேண்டுவனின்றிருப்பணிசெயப்பெறினே.()

வேறு.

என்றுபலகால்விழுமெழுந்தொழுமழும்புரியு
மென்னையினியா, னின்றுபலவாகவுரைசெய்தவவ
னன்பிறொடுநெஞ்சுருகியே. (௧0௬)

எட்டிலறிவின்றியிறைதன்னிலறிவின்றியிவ்வு
டம்பினுடனே, வீட்டிலுறைவானையினிவீடுபெறு
மென்பதுவிளம்புகிலமே. (௧0௭)

வஞ்சவலியானரகில்வீழ்பிதிராரங்கருபாழ்பட
மிகா, விஞ்சைவலியாலடையவேறினர்சுராதிபர்க
ண்மேலுலகமே. (௧0௮)

தேவருமனித்தருமிவன்றொழில்வியந்துரைசெ
யப்படுவதோ, மூவரும்வணங்கிமுடியாலவனதேவ
